பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 15 சனிக்கிழமை (01-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 338

## புதிய வரலாறு நேற்று கிளிநொச்சியில் ஆரம்பம்

# தமது இடைக்கால நிர்வாக வரைவை விடுதலைப் புலிகள் சமர்ப்பித்தனர்!

## தமிழ்ச்செல்வனிடமிருந்து நோர்வே தூதுவர் பெற்றுக்கொண்டார்
## நேற்று மாலையே அது அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது

கிளிநொச்சி,நவம்பர் 1

**கிளிநொச்சியில் நேற்றுப் புதிய வரலாறு ஆரம்பமாகியிருக்கிறது. விடுதலைப் புலிகள் கடந்த பல வாரங்களாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஆலோசனைகள் நடத்தி தயாரித்த இடைக்கால நிர்வாகம் தொடர்பான வரைவை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுப் பகல் 12.05 மணியளவில் நோர்வேத் தூதுவர் ஹென்ஸ் பிரட்ஸ்கரிடம் கையளித்தார்.**

கிளிநொச்சியிலுள்ள புலிகளின் நடுவப்பணியகத்தில் இந்த முக்கிய நிகழ்வு இடம்பெற்றது.

புலிகளின் வரைவில் என்ன தெரிவிக்கப்பட்டுள்ளது என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த நோர்வே தூதுவர், இந்த வரைவு புலிகளின் சொத்து. இந்த வரைவில் என்ன அடங்கியுள்ளது என்பதைச் சனிக்கிழமை (இன்று) அவர்கள் நடத்தும் செய்தியாளர் மாநாட்டில் விளக்கிக் கூறுவர் என்றார்.

நோர்வேத் தூதுவர் ஹென்ஸ் பிரட்ஸ்கரும் நோர்வேத் தூதரக ஊடகப் பேச்சாளர் தோமஸ் ஹெக்லாண்டும் நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

இவர்களை புலிகளின் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ. தங்கன், புலிகளின் சமாதானச் செயலகச் செயலாளர் புலித்தேவன் ஆகியோர் வரவேற்று நடுவப்பணியகத்துக்கு அழைத்துச்சென்றனர்.

நடுவப் பணியகத்தில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நோர்வே இராஜதந்திரிகளை வரவேற்றார். 11.30 மணியளவில் வரைவு குறித்து புலிகள் நோர்வேத் தூதுவருடன் பேச்சு நடத்தினர். 12.05 மணியளவில் வரைவு நோர்வேத் தூதுவரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது. நோர்வேக் குழுவினர் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து ஹெலிமூலம் கொழும்பு திரும்பினர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க விஜயத்திற்காக பிரதமர் நேற்றுப் பயணம்

கொழும்பு,நவ.1

அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை பயணமானார். அமெரிக்கா செல்லும் வழியில் பிரதமர் லண்டனுக்கும் செல்வார். (ஜ)

### கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

கொழும்பு,நவ.1

கொழும்பில் இடம்பெற்ற சிங்கள - தமிழ் கலைக்கூடலை குழப்புவதற்கு காட்டுமிராண்டித்தனமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்துள்ளது.

இந்த விழா எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாத உயர் தரத்திலான

(16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் வீதி திருத்தும் பணிக்கு வந்த வாகனத்தில் ரி–56 ரக துப்பாக்கி மீட்பு!

### கிளிநொச்சியில் காவல்துறையினர் கைப்பற்றினர்

கிளிநொச்சி,நவ.1

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபடும் பணியாளர்களை ஏற்றி வந்த வாகனம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கி ஒன்றை காவல்துறையினர் கைப்பற்றியிருக்கின்றனர்.

ஏ-9 வீதியில் குற்றத்தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி காவல் பணிமனையினர் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் வாகனம் ஒன்றை வழிமறித்து சோதனையிட்டபோது இந்தத் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது. வாகனத்தில் இருந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

காவல்துறையினர் அந்த வாகனத்தை வழிமறித்தபோது அதிலிருந்தோர் தாங்கள் வீதிப்புனரமைப்பு வேலைகளில் ஈடுபடுபவர்கள் என்றும் விரைவாகச் சென்றடைய வேண்டும் என்றும் கூறியிருக்கின்றனர். அவர்கள் மிகவும் பதற்றத்துடன் காணப்பட்டதால் சந்தேகமடைந்த காவல்துறையினர், வாகனத்தை நன்கு சோதனையிட்டபோது அதில் ரி-56 ரக துப்பாக்கி

(16ஆம் பக்கம் பார்க்க)

## நியூஸிலாந்து நாட்டின் எம்.பி. தமிழ்ச்செல்வனை சந்தித்தார்

கிளிநொச்சி,நவ.1

நியூஸிலாந்து நாடாளுமன்ற உறுப்பினரும் கிறீன் கட்சிப் பிரமுகருமான ஆன்கிற்ஸொக் நேற்று கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கு நியூஸிலாந்து எவ்வாறு உதவ முடியுமென்பது பற்றியும் புனர்நிர்மாணத்திற்கு எத்தகைய பங்களிப்பை வழங்க முடியும் என்பது பற்றியும் அறிவதே தனது இச்சந்திப்பின் நோக்கமென கிற்ஸொக் தெரிவித்துள்ளார்.

தனது கட்சி நியூஸிலாந்தின் ஆளும் கட்சியாக இல்லாதபோதிலும், இந்த விடயங்கள் பற்றி வெளிநாட்டமைச்சருடன் கலந்துரையாடி நியூஸிலாந்தைப் பங்களிக்கச் செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

போரினால் பெண்களும் சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதை தான் நேரடியாகக் கண்டு அறிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-8)

### சமாதான முயற்சிகளில்

## ஜனாதிபதியின் தலையீடு: நோர்வே தரப்பு அதிருப்தி?

கொழும்பு,நவ.1

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் தலையீடு செய்வது அந்த முயற்சிக்கும் அதில் நோர்வேயின் பங்களிப்புக்கும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ்வாறு நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன் எச்சரிக்கை விடுத்திருக்கிறார் என்று இலங்கை வானொலி நேற்று செய்தி வெளியிட்டது.

நோர்வேப் பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி அந்தச் செய்தி வெளியிடப்பட்டது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரை நீக்கவேண்டும் என்ற ஜனாதிபதியின் கோரிக்கை நாட்டில் சர்வதேச கண்காணிப்பாளர்களின் செயற்பாட்டை பாதிக்கும் என்று நோர்வே கூறியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-8)

## போர் நிறுத்த கண்காணிப்புப் பணியில் டெலிவ்சன் இனிமேல் ஈடுபடக் கூடாது

### ஜனாதிபதியின் நிலைப்பாடு இது என்கிறது செயலகம்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் டிரிக்லே டெலிவ்சன் அப்பதவியிலிருந்து வெளியேறியே ஆகவேண்டும் என்று ஜனாதிபதி, நோர்வேப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்துகிறார். இலங்கையின் போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் அவர் இனிமேலும் ஈடுபடக் கூடாது என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும் எனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி செயலகம் விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றில் கடிதத்தின் விபரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கண்காணிப்புக் குழுத்தலைவரை அகற்றக்கோரி ஜனாதிபதி சந்திரிகா நோர்வே பிரதமருக்கு அனுப்பிய கடிதம் ஜனாதிபதியினால் கடந்த புதன்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

கண்காணிப்புக் குழுத் தலைவரின் செயற்பாடுகள் குறித்து அண்மைக்காலமாக ஜனாதிபதி திருப்தியடையாததனாலேயே அவரை அப்பதவியிலிருந்து நீக்குமாறு கோர ஜனாதிபதிக்கு நேரிட்டது எனக் கடிதத்தில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அதிகாரங்கள் இழுபறி: உயர் நீதிமன்றின் விசாரணை பூர்த்தி

### தீர்ப்பு ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும்

கொழும்பு,நவ.1

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் அதிகார இழுபறி தொடர்பான தனது விசாரணையை உயர்நீதிமன்றம் முடித்துக் கொண்டுள்ளது.

இது தொடர்பாகத் தரப்புகளின் எழுத்துமூல வாதங்களை எதிர்வரும் திங்கட்கிழமை சமர்ப்பிக்கும்படி கோரிய உயர்நீதிமன்றம், தனது தீர்ப்பை மூடிய உறையில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கும்.

இராணுவத்தில் கடமையாற்றும் உயர் அதிகாரிகளின் சேவைக்காலத்தை நீடிப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் விடுத்த வர்த்தமானி அறிவித்தல், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களில் அத்துமீறித் தலையிடு

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் – சிங்கள உறவை மேம்படுத்த வவுனியாவில் சமாதான மலர் பேரணி

வவுனியா,நவ.1


தமிழ்-சிங்கள மக்களின் உறவை மேம்படுத்தும் வகையில் எதிர்வரும் 9ஆம் திகதி வவுனியாவில் சமாதான மலர் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

மடுவ சந்தியில் ஆரம்பமாகவுள்ள இந்தச் சமாதானப் பேரணி வவுனியா நகரின்பிரதான வீதியூடாகச் சென்று ஆஸ்பத்திரிச் சந்தியில் முடிவடையும். பேரணியில் கலந்து கொள்ளும் மக்கள் தமது இரு கைகளிலும் பூக்களைத் தாங்கிச்செல்வர்.

வடக்கு-கிழக்குப் பகுதியில் வாழும் அனைத்து சமூகத்தினரும் சுதந்திரமாக வாழ வேண்டுமென்பதையும் சமாதானத்தையும் வலியுறுத்தி இப்பேரணி நடத்தப்படவுள்ளது. (ஜ-8/04)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**









மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடத்தும் நடமாடும் சேவை நேற்று யாழ். செயலகத்தில் ஆரம்பமாகியது. வாகனங்களை பதிவு செய்தல், இலக்கங்கள் வழங்குதல், உடைமை மாற்றம் செய்தல், சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் போன்ற சேவைகள் நேற்று நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நடமாடும் சேவையை நடத்துவதற்காக 40 பேர் கொண்ட குழு யாழ்ப்பாணம் வந்துள்ளது.

*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# ஐயாயிரம் பேருக்கு விரைவில் நிரந்தர 'லைசென்ஸ்' கிடைக்கும்

## மோ. திணைக்கள அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,நவ.1

தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 5 ஆயிரம் சாரதிகளுக்கு அடுத்த இரு வாரங்களுக்குள் நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரம் (லைசென்ஸ்) வழங்கப்படவுள்ளது.

இத்தகவலை, நடமாடும் மோட்டார் போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்காக கொழும்பிலிருந்து யாழ். வருகைதந்துள்ள அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள 550 பேருக்கான நிரந்தர சாரதி அனுமதி அட்டைகள் எடுத்துவரப்பட்டுள்ளன. அவை யாழ். செயலகத்தில் தற்போது இடம்பெற்றுவரும் நடமாடும் சேவையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தை கொண்டிருப்போர், தமது நிரந்தர சாரதி அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றுள்ளதா என்பதனை அறிந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அவ்வாறு கிடைக்கப்பெறாதவர்கள், தமது தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்தின் விவரங்களைக் குறிப்பிட்டு முறையீட்டுக் கடிதமொன்றினை நடமாடும் சேவையில் சமர்ப்பிக்க வேண்டும்.

அடுத்த இருவார காலத்திற்குள் அவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரத்தை யாழ். செயலகத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் - இப்படி அந்த அதிகாரி தெரிவித்தார். (எ-5-9)

## தென்கிழக்கு பல்கலை மாணவர் சமூக அழைப்பை அடுத்து

# அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்கள் நேற்று பூரண ஹர்த்தாலினால் செயலிழந்தன!

## விசேட அதிரடிப்படையினர் தாக்குதலால் ஓர் இளைஞர் வைத்தியசாலையில்

நிந்தாவூர்,கல்முனை,நவ.1

அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. வர்த்தக நிலையங்கள், அரச அலுவலங்கள், வங்கிகள், கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. பல இடங்களில் வீதிகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு, டயர்கள் எரிக்கப்பட்டதால் போக்குவரத்துக்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டன.

தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கிண்ணியா, முள்ளிப்பொத்தனை, மூதூர் ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைக் கண்டித்தும் - முஸ்லிம்களின் உயிர், உடைமை, பாதுகாப்பு போன்ற விடயங்களில் அக்கறையற்றிருக்கும் அரசைக் கண்டித்தும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதாக தென் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் சமூகம் அறிவித்துள்ளது.

வீதித்தடைகளால் கல்முனை - அக்கரைப்பற்று, கல்முனை - அம்பாறை பிரதான வீதிகளில் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

நிந்தவூர் பிரதான வீதியில் தடைபோடப்பட்ட இடத்தில் வைத்து விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் நிந்தவூர் மீராநகரைச் சேர்ந்த ஏ.முகைமீன் எனும் 17 வயது இளைஞன் சிகிச்சைக்காக நிந்தவூர் மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்மாந்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரான் பெரேரா தலைமையிலான பொலிஸ் குழுவினர் வைத்தியசாலைக்குச் சென்று அந்த இளைஞனிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, நிந்தவூர், மாளடிப்பள்ளி, சம்மாந்துறை, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை, மருதமுனை உட்பட முஸ்லிம் பிரதேசங்களில் இந்த பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தால் காரணமாக கல்முனையிலிருந்து அம்பாறை, அக்கரைப்பற்று, பொத்துவில், மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை.

கல்முனைப் பகுதியில் தமிழ் மக்களும் நேற்றைய ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். காரைதீவு தபாலகம், கல்முனை தமிழ் பிரதேச செயலகம் போன்றவையும் தமிழருக்குச் சொந்தமான கடைகள் பலவும் மூடப்பட்டிருந்தன.

கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, சம்மாந்துறை போன்ற இடங்களில் டயர் எரிப்புகள் மற்றும் வீதித் தடைகள் ஏற்படுத்தப்படவில்லை. பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். கல்முனை நகரிலும் பெரிய பள்ளிவாசல்கள் உள்ளிட்ட பொது இடங்களிலும் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர். அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

அட்டாளைச் சேனை மருதையடி, தபால் கந்தோரடி, மீனோடைக்கட்டு ஆகிய சந்திகளில் பாரிய தடைகள் போடப்பட்டிருந்தன. பாலமுனை மாவட்ட வைத்தியசாலையில் முண்டுக்கற்கள் வீதிக்கு குறுக்கே குவிக்கப்பட்டிருந்தன. உமி குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டது. ஒலுவில் சந்தியில் பாரிய கட்டைகள், டயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. ஒலுவில் களியோடை பாலத்தடியில் டயர்கள் எரிக்கப்பட்டன. இருந்தபோதும் இப்பிரதேசங்களில் எதுவித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. (ஐ)

### சிகிச்சை முகாம்

தெல்லிப்பழை,நவ.1

மல்லாகம் சுவாமி ஞானப்பிரகாசம் சனசமூக நிலையத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மல்லாகம் - தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மாலை வரை மல்லாகம் புதுமைமாதா ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மல்லாகம் தெற்கு, மல்லாகம் மத்தி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு இலவச மருத்துவப் பிரிசோதனைகளையும், மருத்துகளையும் பெறமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8-150)

# இடம்பெயர்ந்தோர் மீள்குடியமர்வு எண்ணிக்கையில் வீழ்ச்சிப்போக்கு!

## புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சு தகவல்

கொழும்பு,நவ.1

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்கிடையேயும், மாவட்டங்களுக்குள்ளும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் மீள்குடியமர்வு எண்ணிக்கையில் வீழ்ச்சிப் போக்கு காட்டுவதாக புனர்வாழ்வு, மீள்குடியமர்வு, அகதிகள் அமைச்சு செய்திக் குறிப்பொன்றில் தெரிவித்திருக்கிறது.

2002ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை 1 லட்சத்து 41 ஆயிரத்து 107 ஆக இருந்த இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை, ஜூலையில் 28 ஆயிரத்து 827 ஆகவும், ஒகஸ்டில் 3 ஆயிரத்து 462 ஆகவும் வீழ்ச்சியடைந்திருப்பதாக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

2003 ஒகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே இடம்பெயர்ந்தோரின் கூடுதலான மீள்குடியமர்வு இடம்பெற்றிருக்கிறது. இம்மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரிவிலேயே பெரும்பாலான இடம்பெயர்ந்தோரின் மீள்குடியமர்வு இடம்பெற்றிருக்கிறது.

2002 ஜனவரி முதல் 2003 ஒகஸ்ட் வரை ஆயிரத்து 102 அகதிக் குடும்பங்கள் இந்தியாவிலிருந்து யாழ்., மன்னார் மாவட்டங்களுக்குத் திரும்பியுள்ளன. 2003 ஒகஸ்டில் 160 அகதிக் குடும்பங்கள் யாழ், மன்னார் மாவட்டங்களுக்குத் திரும்பின - இவ்வாறு அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### சுன்னாகத்தில் விபத்து

தெல்லிப்பழை,நவ.1

சுன்னாகம் நகரின் மத்தியில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற விபத்தொன்றில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்.

எஸ். தர்மலிங்கம் (வயது - 75) என்ற வயோதிபரே படுகாயமடைந்தவராவார்.

வீதியைக் கடக்க முற்பட்ட இந்த வயோதிபரை வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியுள்ளது. இதன் போது மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த நபரும் தலையில் சிறிய காயத்திற்குள்ளானார்.

சம்பவ இடத்திற்கு வந்த பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். விபத்தில் சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிளை சுன்னாகம் பொலீஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர். (ஐ-8-150)

# மணல்காட்டில் படையினரின் இலவச மருத்துவ சிகிச்சை முகாம்

52 ஆவது படையணி தளபதியின் ஏற்பாட்டில் 524ஆவது படையணியின் பிரதேசத்திற்குட்பட்ட மணற்காடு என்னுமிடத்தில் 52ஆவது படையணி பிரிவின் மருத்துவப் பிரிவினால் இலவச மருத்துவ முகாம் ஒன்று நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. இதில் 100இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிகிச்சை பெற்றுச்சென்றனர்.

தங்கள் காலடிக்கே வந்து இந்த மருத்துவ சிகிச்சை அளித்தது எங்களைப் போன்ற வசதி குறைந்த ஏழை மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். இது மாதிரியான சேவையினை இதுவரை யாரும் வழங்கவில்லை என்று கருத்துத் தெரிவித்த பொதுமக்கள் 52 ஆவது படையணியினருக்கு நன்றியையும் தெரிவித்தனர் என்று இராணுவ வெகுஜனப் பிரிவு கப்டன் விஜயசிங்க தெரிவித்தார்.

அத்துடன், இந்த மக்களின் கஷ்டத்தை உணர்ந்து எதிர்வரும் காலங்களில் இது மாதிரியான சேவையினை வாரத்தில் குறைந்தது ஒரு நாளைக்காவது நடத்தவிருப்பதாக 52 ஆவது படையணியினர் தெரிவித்தனர். (ஐ)



52ஆவது படையணியின் மருத்துவப் பிரிவினரால் மணல்காட்டில் நேற்று நடத்தப்பட்ட மருத்துவமுகாமில் சிகிச்சை வழங்கப்படுவதை படங்களில் காணலாம்.

*(படங்கள்: இராணுவ ஊடகப் பிரிவு)*

பொது சன நூலகம்

# மலேஷியப் பிரதமர் மஹாதீர் முஹம்மது 21 வருடகாலப் பதவியிலிருந்து ஓய்வு

கோலாலம்பூர்,நவ.1

21 வருடங்கள் ஆட்சியின் பின் மலேஷியப் பிரதமர் மஹாதீர் முஹம்மது நேற்று பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

மிகச் சிறியதொரு வைபவத்தில் அவர் தனது பதவியை புதிய பிரதமர் அப்துல்லா பவாதியிடம் கையளித்தார்.

பிரதமர் மஹாதீர் முகம்மது ஓய்வு பெறுவதையிட்டு பிரியாவிடை வைபவங்களும், விருந்துபசாரங்களும் நடைபெற்றன.

பிரதமர் ஓய்வுபெறுவதால் கடந்த புதனன்று நடைபெற்ற கடைசி அமைச்சரவைக் கூட்டம் சோகமாயிருந்தது. நாடாளுமன்றத்தில் கடந்த வியாழனன்று பிரதமர் தனது இறுதி உரையையும் நிகழ்த்தினார்.

நேற்று தொழுகை முடித்து பிரதமர் மஹாதீர் புதிய பிரதமரான அப்துல்லா பவாதியுடன் சென்று மன்னரைச் சந்தித்தார். அங்கு மலேஷியாவின் ஐந்தாவது பிரதமராக அப்துல்லா பவாதி சத்தியப்பிரமாணம் செய்தார்.

இதனைத் தொடர்ந்து மஹாதீர் முஹம்மது தனது அலுவலகத்திற்கு புதிய பிரதமர் அப்துல்லாவை அழைத்துச் சென்று சம்பிரதாய பூர்வமாகத் தனது ஆசனத்தைக் கையளித்தார்.

1981ஆம் ஆண்டு மஹாதீர் முஹம்மது பிரதமராகப் பதவியேற்றார். இவர் பதவியேற்ற போது இன்றைய மலேஷியக் குடிமக்களில் 40 சதவீதத்தினர் பிறந்திருக்கவில்லை.

தனது ஆட்சிக் காலத்தில் பொருளாதாரத்தை முன்னேற்றியதுடன் ஜனநாயக அராஜகத்திற்கு எதிராகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார்.

பதவியிலிருந்து ஓய்வுபெறும் போதும் பிரதமர் மஹாதீர், யூதர்களையும், அமெரிக்காவையும் கடுமையாகச்சாடிப் பேசினார்.

ஒருகாலத்தில் ஐரோப்பியர்களிடம் அடிமை வாழ்வு வாழ்ந்து பலவித துன்புறுத்தல்களை அனுபவித்த யூதர்கள், இன்று அரபு நிலத்தை ஆக்கிரமித்து முஸ்லிம்களுக்குத் தொல்லை கொடுத்து வருகின்றனர்.

மலேஷிய நாட்டு அரசியலமைப்புச் சட்டம், மதசுதந்திரத்துக்கு வழி வகுக்கிறது. ஆனால், அமெரிக்காவோ பலநாட்டு மக்களையும் அடிமைப்படுத்தி அவர்களை கிறிஸ்தவ மதத்துக்கு வலுக்கட்டாயமாக மாற்றி வருகிறது. (கடந்த 16ஆம் திகதி இஸ்லாமிய நாடுகள் மாநாட்டில் பேசுகையில், யூதர்கள் உலகத்தை ஆளப்பார்க்கிறார்கள் என்று இஸ்ரேலை மறைமுகமாகக் குறிப்பிட்டு தாக்கிப் பேசியிருந்தார் மஹாதீர்)

யூதர்கள் ஒரு காலத்தில் ஐரோப்பியர்களால் அடிமைபோல் நடத்தப்பட்டார்கள். அது மிகவும் கண்டிக்கத்தக்கது. முஸ்லிம்கள் ஒருபோதும் யூதர்களை மோசமாக நடத்தவில்லை. ஐரோப்பியர்கள் தங்களை எப்படி நடத்தினார்களோ அதேபோல முஸ்லிம்களை நடத்த யூதர்கள் நினைக்கின்றனர். இது கண்டனத்துக்குரியது. இஸ்ரேலியர்களுக்கு எதிரான வன்முறைத் தாக்குதலை முஸ்லிம்கள் கைவிடவேண்டும். மத்திய கிழக்குப் பிரச்சினை என்பது நிலப் பிரச்சினையே தவிர மத மோதல்கள் அல்ல என்பதை உணரவேண்டும்.


முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலத்தை இஸ்ரேலியர்கள் ஆக்கிரமித்துள்ளார்கள். பலஸ்தீனர்கள் தங்கள் சொந்த நாட்டிலிருந்தே வெளியேற்றப்படுகிறார்கள். இதைவிட வேறு கொடுமை என்ன வேண்டும்?

பிரிட்டன் அல்லது அமெரிக்காவின் ஒரு பகுதியை இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த யூதர்கள் ஆக்கிரமித்தால் அதை அவ்விரு நாடுகளும் கைகட்டி வரவேற்குமா? அல்லது நடவடிக்கை எடுக்குமா?

பலஸ்தீனர்கள் தங்கள் நாட்டு நிலத்துக்காகப் போராடி வருகின்றனரே தவிர மத மோதல்களில் ஈடுபடவில்லை - என்று அவர் தெரிவித்திருக்கிறார்.



மலேஷியப் பிரதமர் பதவியிலிருந்து விலகும் மஹாதீர் முஹம்மது (இடது) சம்பிரதாயபூர்வமாக அலுவலக கோப்பு ஒன்றை புதிய பிரதமரான அப்துல்லா பவாதியிடம் கையளிக்கிறார்.



பதவியிலிருந்து ஓய்வுபெற்ற மஹாதீர் முஹமதை வழியனுப்பும் ஆதரவாளர்களும் ஊடகவியலாளர்களும்...

# கலிபோர்னிய காட்டுத் தீ மூடுபனியால் அடங்குகிறது!

கலிபோர்னிய,நவ.1

இருபது பேரை இதுவரை பலி கொண்ட கலிபோர்னிய காட்டுத் தீயின் அகோரம், மூடுபனி காரணமாக சிறிதளவு அடங்கியது. இது ஒரு சிறு தளர்வு மட்டுமே. ஆனால், தீயைக் கட்டுப்படுத்துவதில் மேலும் பல சிரமங்கள் உள்ளன என்று வன அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்டியாகோ மாநிலத்தில் இதுவரை 2,72,000 ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளது. வானிலை குளிர்ந்த தன்மையாக இருப்பதால் தீ அணைப்பு வேலைகள் இலகுவாகவுள்ளன. எனினும், 80 கி.மீ. வேகத்தில் காற்று வீசுவதால் தீயைக் கட்டுப்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

மொத்தம் நான்கு மாநிலங்களில் ஏழு இடங்களில் பரவியுள்ள தீ தொடர்ந்து அனர்த்தம் விளைவித்து வருகிறது.

சந்டியாகோவில் பரவிய தீயில் சிக்கி நேற்றுமுன்தினம் தீயணைப்பு வீரர் ஒருவர் கொல்லபட்டார்.

தீயைக் கட்டுப்படுத்த கனடாவின் மேற்கு மாநிலமான பிரிட்டிஷ் கொலம்பியா கலிபோர்னியாவுக்கு உதவி செய்துள்ளது.

பத்து நீர் பாய்ச்சல் விமானங்களையும், 250 தீயணைப்புப் படையினரையும் அது உடனடியாக கலிபோர்னியாவுக்கு அனுப்பியுள்ளது.

நாளொன்றிற்கு ஒன்பது மில்லியன் டொலர் தீயணைப்புக்காக செலவிடப்படுகிறது. தீயைக் கட்டுப்படுத்த இருநூறு மில்லியன் டொலர்கள் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காட்டுத் தீ காரணமாக கலிபோர்னியாவின் பொருளாதாரம் இரண்டு பில்லியன் டொலர்களால் பாதிப்புறும்நிலை ஏற்பட்டிருக்கிறது.

(ஐ)

# மேயரின் அலுவலகம் ஈராக்கில் தீக்கிரை!

ஈராக்கில் பலூஜா நகர மேயரின் அலுவலகம் நேற்று தீயிடப்பட்டது.

முன்னதாக ஈராக்கியர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதாகவும் - ஆர்ப்பாட்டக்காரர்கள் திடீரென மேயரின் அலுவலகத்துக்குள் நுழைந்து சேதமாக்கி தீயிட்டதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மேயர் அலுவலகம் அருகே பாரிய குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டதாகவும் கூறப்பட்டது.

(ஓ)

# தென்கொரியாவை நோக்கி தீவிரவாதிகளின் கப்பல்!

சியோல்,நவ.1

தென்கொரியாவை நோக்கி ஒரு கப்பல் விரைகிறது என்றும், அதில் பின்லேடனின் அல்-கெய்டா தீவிரவாதிகள் பயணம் செய்கின்றனர் என்றும் அமெரிக்க இராணுவம் எச்சரித்துள்ளது.

நியூஸிலாந்தில் இருந்து புறப்பட்ட 'ஏதெனா' என்ற கப்பல் தென்கொரியாவின் குன்சான் துறைமுகத்தை வந்தடைய இருப்பதாக அந்த எச்சரிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

தென்கொரியாவின் குன்சான் நகரம் அருகே அமெரிக்க இராணுவ வீரர்கள் 37 ஆயிரம் பேர் உள்ளனர். வடகொரியாவுடன் ஏற்பட்டிருக்கும் முறுகலை அடுத்தே அமெரிக்க இராணுவம் அங்கு நிறுத்தப்பட்டுள்ளது.

சரக்குக் கப்பலில் வரும் தீவிரவாதிகள், குன்சான் அருகே உள்ள அமெரிக்க இராணுவத்தினர் மீது மறைமுகத் தாக்குதல் நடத்தலாம் என்று அஞ்சப்படுகிறது.

இதனால், தென்கொரிய இராணுவம் உஷார்படுத்தப்பட்டுள்ளது.

(ஐ)

# ஈராக், ஆப்கான் புனரமைப்புக்கு 87 பில்லியன் டொலர்கள் நிதி

## அமெ. காங்கிரஸ் அங்கீகாரம்

வாஷிங்ரன்,நவ.1

ஈராக், ஆப்கானிஸ்தான் புனரமைப் புக்கென அமெரிக்கக் காங்கிரஸ் 87.5 பில்லியன் டொலர்களை அங்கீகரித்திருக்கிறது. இத்தொகையை செனட் சபை நாளை அங்கீகரிக்கும் என்று கூறப்படுகிறது. செனட்சபையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் ஜனாதிபதி புஷ்ஷின் நிர்வாகத்திடம் இத்தொகை கையளிக்கப்படும்.

இத்தொகையில் ஏதேனும் ஒரு பகுதியைக் கூட மேற்படி இரு நாடுகளுக்கும் கடனாக வழங்கக்கூடாது என்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் கூறியுள்ளனர். அப்படி வழங்கப்படுமானால் மேற்படி தொகை மீளப் பெறப்படும் என்றும் அது எச்சரித்திருக்கிறது.

ஈராக்கிற்கு ஓர் அரசு இல்லை. அத்துடன், அது ஒரு கடன் பளுவுள்ள நாடு, அதனிடமுள்ள எரிபொருளை பிணையாக வைத்து கடனாகப் பணம் வழங்கினால் அது அமெரிக்காவுக்கு எதிரான பிரசாரமாகிவிடும் என்றும் வெள்ளை மாளிகை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

ஆனால், குடியரசுக் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள செனட்சபை மேற்படி நாடுகளுக்கு கடன் வழங்குவதை ஆதரிக்கிறது. ஆனால், புனர்நிர்மாணத்திற்கென வழங்கும் தொகையை கடனாகக் காட்டவேண்டும் என்று அது வலியுறுத்தியுள்ளது.

87.5 பில்லியன் டொலர்களில் 64.7 பில்லியன் இராணுவ நடவடிக்கைகளுக்காகவும், 18.4 பில்லியன் புனர்நிர்மாணத்திற்கும் வழங்கப்படவுள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு 1.2 பில்லியன் வழங்கப்படவிருக்கிறது.

(ஐ)

# அமெரிக்காவில் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் நால்வர் உயிரிழப்பு; இருபது பேர் படுகாயம்!

அமெரிக்காவின் அட்லான்ரா நகரில் வாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டப்பட்ட ஐந்து மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் நேற்று நால்வர் கொல்லப்பட்டனர்; இருபது பேர் காயமடைந்தனர்.

மேலும் முப்பது பேர் வரையில் இடிபாடுகளுக்குள் அகப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

மீட்புப்பணி தீவிரமாக நடைபெறுகிறது. கமெராக்களும் மோப்ப நாய்களும் பயன்படுத்தப்பட்டு இடிபாடுகளுக்குள் அகப்பட்டிருக்கும் தொழிலாளர்களைத் தேடும் பணி நடைபெறுகிறது.

இடிபாடுகளுக்குள் அகப்பட்டுள்ளவர்களை மீட்கும் பணி மந்தகதியிலேயே நடக்கிறது. இதனால் அதனுள் சிக்கியுள்ளவர்களை பிணமாகவே மீட்கும் வாய்ப்புக்கள் உள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இடிந்து வீழ்ந்த கட்டடம் ஆறு மாடிகளைக் கொண்டது. வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்த அடித்தளமே முதலில் இடிந்து விழுந்தது.

இதனால், மேலிருந்த மாடிக் கட்டடங்கள் அப்படியே இடிந்து வீழ்ந்தன. அடித்தளம் இடிந்த ஒருசில வினாடிகளுக்குள்ளேயே ஆறாவது மாடி முற்றிலும் வீழ்ந்துவிட்டது.

இந்த அனர்த்தில் படுகாயமடைந்தோர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

காலை 10.40 மணிக்கு இந்த அனர்த்தம் நடந்தது. அப்போது அக்கட்டடத் தொகுதியில் முன்னூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தனர்.

அங்கிருந்த ஹரோல்ட் என்பவர் கூறுகையில் -

'பூமிநடுக்கம் போன்று இருந்தது. எங்கே ஓடலாம் என்று தெரியாமல் படிக்கட்டுக்களை நோக்கி ஓடினேன் படிக்கட்டு அப்படியே சரிந்துவிட்டது. இன்னுமொரு படிக்கட்டை நோக்கி ஓடினேன். அதனையும் காணவில்லை. இறுதியில் எல்லோருமாகத் தட்டுடன் சேர்ந்து வீழ்ந்தோம் - என்றார்.

(ஓ)

உலக அரங்கில்

# ஜப்பான் டாக்டருக்கு தூக்குத் தண்டனை!

ஜப்பானின் டோக்கியோ நகரில் சுரங்கப்பாதையில் 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற விஷவாயுத் தாக்குதலில் 12பேர் பலியான சம்பவத்தில் தொடர்புடைய டாக்டர் டொமாசா நகவாவுக்கு (வயது 41) தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சுரங்கப்பாதையில் இடம்பெற்ற விஷவாயுத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாயுவைத் தயாரிப்பதில் முக்கிய பங்குவகித்தவர் டாக்டர் டொமாசா நகவாவா என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது என்று டோக்கியோ மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

சுரங்கப் பாதையில் விஷவாயு மூலம் நடைபெற்ற இத்தாக்குதல் ஜப்பானுக்கு மிகவும் அதிர்ச்சி அளித்த சம்பவமாகும். ஜப்பான் வரலாற்றில் நகர்ப்புறத்தில் பயங்கரவாதப் பாதிப்பு ஏற்படுத்திய மோசமான சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ரஷ்ய அதிபரின் சகா நேற்று திடீர் ராஜினாமா!

மொஸ்கோ,நவ.1

ரஷ்ய ஜனாதிபதியின் நெருங்கிய சகாவும், அரசில் முக்கிய அங்கம் வகிப்பவருமான வோலோஷின் (வயது 47) என்பவர் நேற்று திடீர் இராஜினாமாச் செய்தார்.

கடந்தவாரம் ரஷ்யாவின் மிகப் பெரும் வர்த்தகரான மிஹெயில் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்தே இவர் இராஜினாமாச் செய்தார்.

வரி ஏய்ப்பு, மோசடி, போலி ஆவணங்களை பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே மிஹெயில் கைது செய்யப்பட்டார்.

ஆனால், இவரது கைது சட்டத்திற்கு முரணானது என்று தெரிவித்தே வோலோஷின் இராஜினாமாச் செய்திருக்கிறார்.

இவர் முன்னாள் ஜனாதிபதி போரிஷ் யெல்ஸினின் ஆட்சியின் போது அரசில் அங்கம் வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் சுதந்திரப் போக்காளர்களுக்கும், கடும் போக்காளர்களுக்கும் இடையேயான அதிகாரப் போட்டியே மேற்படி குழப்பத்திற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதி புடினின் ஆட்சியில் கடும் போக்காளர்களின் கை ஓங்கி வருவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

# அதிபர், ஆசிரியர் மீது கல்வீச்சு; ஆட்சேபித்து மாணவர் பகிஷ்கரிப்பு

## எழுவைதீவு பாடசாலையில் சம்பவம்

ஊர்காவற்றுறை,நவ.1

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு எழுவைதீவு றோ.க.தமிழ் கலவன் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மீது விஷமிகள் சிலர் கல்வீச்சு மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து மேற்படி சம்பவத்தைக் கண்டித்து பாடசாலை மாணவர்கள் வியாழனன்று வகுப்புக்களை பகிஷ்கரித்தனர்.

ஆசிரியர்கள் மீது கல்வீச்சு மேற்கொள்ளுவதன்மூலம் எமது கல்வி நடவடிக்கைகளை எவரும் இடையூறு செய்யமுன்வரவேண்டாம் எனக் கோரியும் - சம்பந்தப்பட்டவர்களை இனங்கண்டு சட்டத்தின்முன் நிறுத்துமாறும் கோரியே பாடசாலை முன்பாக மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

இது தொடர்பாக மேற்படி பாடசாலை அதிபர் த.சத்தியசீலன் தெரிவிக்கையில்:

எழுவைதீவு பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் வெளியிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள் மேற்படி பாடசாலையிலேயே தங்கியிருந்து தமது கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுத்து வருவதாகவும் -

எனினும் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் தாங்கள் தங்கியிருந்த அறைமீது சரமாரியாக வீசப்பட்ட கற்கள் நித்திரையில் இருந்த ஆசிரியர்கள் மீது வீழ்ந்ததாகவும் -

எனினும், எவரும் காயமின்றித் தெய்வாதீனமாகத் தப்பிவிட்டதாகவும் தெரிவித்தார். (எ-16)

## கண்ணீர் அஞ்சலி



கோண்டாவில் கிழக்கு.
இராசமணி களஞ்சியத்தின் உரிமையாளரான

**நல்லையா தளையசிங்கம்**

**அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.**

அரசடி,
கொக்குவில் மேற்கு. (24294) (25)

**ந.யோகலிங்கம் குடும்பத்தினர்.**
(ராசா).

# மரண அறிவித்தல்கள்

## நல்லையா தளையசிங்கம்

(இராசமணி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா தளையசிங்கம் (30.10.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா - றோசம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் இராசமணியின் அன்புக் கணவரும் உதயசெல்வன், திருவருட்செல்வன், றோகினி, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும திலகரெட்ணம் அவர்களின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2003) சனிக்கிழமை முற்பகல் 11.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைகளுக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (24293) (34-24-17-13)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## நடேசன் சிறிதரன்

இடைக்காடு தெற்கைப் பிறப்பிடமாகவும் துலாக்கட்டு, வதிரியை வதிவிடமாகவும் கொண்ட நடேசன் சிறிதரன் நேற்று (31.10.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசன் - சின்னம்மா ஆகியோரின் மகனும் கணபதிப்பிள்ளை - செல்லப்பாக்கியம் ஆகியோரின் மருமகனும் சுலோசனாவின் அன்புக் கணவரும் சதீஸ்கரன் (யா/நெ/மெ/மி/த/க. பாடசாலை) அவர்களின் பாசமிகு தந்தையாரும் தனலட்சுமி, சுகந்தினி, நிர்மலா, முரளீதரன், கங்காதரன் - வித்தியாதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2003) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துலாக்கட்டு.
வதிரி, கரவெட்டி. (C31057)(34-17-21-13)

தகவல்:
சி.சுலோசனா (மனைவி).

## இராசதுரை றஜந்தன்

(உரிமையாளர், புதிய ஆனந்தா நகைமாடம், யாழ்ப்பாணம்)

மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும் 52/2, வைமன் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட இராசதுரை றஜந்தன் 29.10.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராசதுரை - பரமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் இராசலிங்கம் - தையல்நாயகி (லண்டன்) தம்பதிகளின் மருமகனும் ரவிதேவியின் அன்புக் கணவரும் றஜ்சாந்தின் பாசமிகு தந்தையும் வசந்தன் (லண்டன்), முகுந்தன் (நியூ ஆனந்தா ஜ"வல்லறி, வவுனியா), துஷ்யந்தி, ரவீந்திரன் (நியூ ஆனந்தா ஜ"வல்லறி, வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவிகரன் (லண்டன்) அவர்களின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்கும்பான் சாட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

52/2, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(24297) (34-13-17-24)

தகவல்:
செல்லையா இராசதுரை (குட்டி) - தந்தை,
இ.வசந்தன், இ.முகுந்தன்,
இ.ரவீந்திரன். (சகோதரர்கள்).

## பரிசளிப்பு விழாக்கள்

வலி.தெற்கு,நவ.1

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நிறுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கலாநிதி ஆ.சக்திவேல் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஆசியுரையை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும், நிறுவுநர் நினைவுப் பேருரையை சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளா சி.செல்லையாவும் நிகழ்த்துவர். (எ-6-152)

* * *

யாழ்ப்பாணம்,நவ.1

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலத்தின் பவளவிழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று சனிக்கிழமை பற்பகல் ஒருமணிக்கு வித்தியாலய அருணாசல கலையரங்கில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் முதன்மை விருந்தினராகவும் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளா சி.இளம்பரிதி ஆகியோர் சிறப்பு விருநதினாகளாகவும் கலந்துகொள்வர். (எ-6)

## கணனி பயிற்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ். கஸ்தூரியார் வீதி, கில்னர் லேனில் அமைந்துள்ள லண்டன் ஸ்ரீ கனகதுர்கை இலவச கணனிப்பயிற்சி நிலையத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

பயிற்சி நெறியைத் தொடர்வதற்கு விண்ணப்பித்து முன்னாயத்தப் பயிற்சிகளில் கலந்துகொண்ட அனைவரையும் உடனடியாக நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

## கைதடியில் கலந்துரையாடல்

கைதடி,நவ.1

மாவீரர் நாள் நிகழ்வுகள் தொடர்பாக கைதடிப் பிரதேசத்தில் உள்ள சனசமூகநிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்கும் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை10 மணிக்கு கைடியில் உள்ள பிரதேச அரசியல் துறைப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்துகொண்டு தங்களது ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வழங்குமாறு தென்மராட்சி அரசியல் துறைக் கோட்டப் பொறுப்பாளர் செ. கலைவாணன் கேட்டுள்ளார். (ஒ-75)

## மின் அலுவலகம் இடம்மாற்றம்

தென்மராட்சி, நவ.1

மீசாலை, புத்தூர் சந்தியில் இயங்கிவந்த இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி மின்பாவனையாளர் அலுவலகம் இன்று சனிக்கிழமை தொடக்கம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் தும்புத் தொழிற்சாலைக்கு முன்பாக உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கவுள்ளது. (எ-10-117)

## முன்பள்ளி மாணவருக்கு சீருடை வழங்க ஏற்பாடு

சண்டிலிப்பாய்,நவ.1

சங்கானை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்திவரும் 12 முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவச சீருடைகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் அனுசரணையுடன் இந்தச் சீருடைகள் வழங்கப்படுமென்றும் -

சுமார் 350 மாணவர்கள் இதன் மூலம் நன்மைபெறவுள்ளன என்றும் - கூறப்பட்டது. (எ-135)

## ரமழான் சிந்தனை



நோன்பு நோற்பதால் எமது உடல் ஆரோக்கியம் பெறுகின்றது. உள்ளம் கட்டுப்படுத்தப்படுகிறது. ஏழைகளின் பசித்துயரை செல்வந்தர்கள் உணர்கிறார்கள் தர்மம் செய்யத்தூண்டப்படுகிறார்கள். நோன்பு காலத்தில் அதிகமாகச் செய்யப்படும் வணக்கங்கள் தொடர்ந்தும் பழக்கத்தில் வருகின்றன. அல்குர்ஆன் ஓதப்படுகிறது. பாவ மன்னிப்புக் கேட்கப்படுகிறது. இதனால்தான் "நோன்பாளியின் வாயிலிருந்து வெளியாகும் வாடை அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியை விட மணமானது" என்றும் "நோன்பாளி றய்யான் என்ற விசேட வாயிலால் சுவர்க்கம் நுழைவான்" என்றும் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

நன்றி : மக்கள் பணிமனை.

# கரம்பொன்னில் பட்டப்பகலில் கூரைகள், யன்னல்கள் திருட்டு!

ஊர்காவற்றுறை,நவ.1

ஊர்காவற்றுறை, கரம்பொன் கிழக்குப் பகுதியில் ஆள்கள் அற்ற வீடுகளில் திருடர்கள் பட்டப்பகலில் கூரைகள் மற்றும் நிலைகள், யன்னல்கள் போன்றவற்றைக் கழற்றிச் செல்வதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் இப்பகுதியிலுள்ள வீடு ஒன்றில் கதவுநிலை ஒன்றை இருவர் சேர்ந்து கழற்றிக் கொண்டிருந்தவேளையில் சத்தம் கேட்டு அயலவர்கள் சென்று பார்த்தபோது கழற்றிய நிலையையும் கைவிட்டு திருடர்கள் தப்பி ஓடிவிட்டனர் எனக் கூறப்பட்டது.

இப்பகுதியிலுள்ள மீளக்குடியமராதோரது பெரும்பாலான வீடுகள், கூரைகள் மற்றும் தளபாடங்கள் அபகரிக்கப்பட்ட நிலையிலே காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். (எ-16)

## பணிநிலை வேண்டுகை

யாழ். மாவட்ட வருவாய்ப்பகுதி ஆளுகையில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு ஆள்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. வேண்டுகையரின் தன்வரலாறு அடங்கிய (சுயவிவரம்) விளக்கங்களை 2003.11.09 ஆம் நாளுக்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

பணிநிலைகள்:

01. வரி அறவீட்டாளர்.
02. எழுதுநர்.

தகைமைகள்:

பணிநிலை - 01

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த.சாதாரணதரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை 18-40 வரை

பணிநிலை - 02

01. க.பொ.த. உயர்தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை: 18-40 வரை.

வேண்டுகை அனுப்ப வேண்டியமுகவரி:
**அலுவலர்,**
**மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,**
**வருவாய்ப்பகுதிச் செயலகம்,**
**கிளிநொச்சி.**

நேர்முகத் தேர்வு நடைபெறும்
நாள்: 2003.11.12
நேரம்: காலை 9.00 மணி
இடம்: வருவாய்ப்பகுதிச் செயலகம்
யாழ்சாலை, பளை.

குறிப்பு: 1. நேர்முகத்தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது.
2. நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதருதல் வேண்டும்.

**ஆளுகை,**
**மனிதவள மேம்பாட்டுப் பிரிவு,**
**வருவாய்ப்பகுதி.**

(24301) (25-13-17-24)

J.M.J

## விண்ணக வாழ்வில் 43ஆம் நாள் நினைவஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே - என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

அன்னை மடியில்
22 - 10 - 1928



ஆண்டவன் அரவணைப்பில்
20 - 09 - 2003

**திரு.பிலிப். இராசரத்தினம் அருள்நாயகம்**
**Mr.Philip Rajarathinam Arulnayagam** வசாவிளான்

மன்னவனே உம் நினைவோ மறக்க முடியவில்லை
எம் நிலைமை புரிந்தும் நீர் ஏனோ தவிக்கவிட்டீர்
மின்னாமல் முழங்காமல் நீர் மறைந்த மாயத்தால்
உம் புண்ணியத்தின் பேறுபலன் இன்னதென்று புரியவைத்தீர்
கதறியழும் மகளோ கண்ணீரில் நனைகின்றாள்
பாசக்கயிறறுத்து பரிதவிக்கும் பேத்தி
மனமுருகும் மருமகனின் வேதனையை புரிந்துவிட
சோகத்தில் மிதக்கும் சகோதரன், சகோதரர்கள்,
மைத்துனர்மார், பெறாமக்கள், மருமக்கள்
மனக்கவலை தீர்த்துவிட மீண்டும் இங்கு வரும்படி
வேண்டுகிறோம் ஆண்டவனை.

இவரது ஆன்ம சாந்திக்காக இன்று (01.11.2003) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியிலும், மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சு.தர்மகுலசிங்கம்,
21, சோமசுந்தரம் லேன்,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (24295) (24-13-17)

இவரின் பிரிவால் துயறுறும்:
**குடும்பத்தினர்.**

உதயன்

# தீர்வு முயற்சியில் திருப்பங்கள் இன்று வெளிப்படலாம்

இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான முயற்சிகளின் முக்கியமானதோர் கட்டம் இன்று இடம்பெறுகின்றது.

அரசு, புலிகள் ஆகிய இருதரப்புக்களிலிருந்தும் குறிப்பிடத்தக்க விடயங்களை - தகவல்களை - வெளிப்படுத்தும் அறிவிப்புக்கள் இன்று வெளியாகவிருக்கின்றன.

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை வழங்குவது கட்டாயமான அம்சமாகின்றது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான தமது யோசனைகள் அடங்கிய திட்ட வரைவை விடுதலைப் புலிகள் நேற்று நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக இலங்கை அரசுக்கு அனுப்பிவைத்திருந்தனர்.

அந்தத் திட்டவரைவை இன்று ஊடகவியலாளர்களுக்குப் பகிரங்கப்படுத்தும் விடுதலைப் புலிகள், இன்றைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவிருக்கின்றார்கள். இந்நிகழ்வு இன்று முற்பகல் கிளிநொச்சியில் இடம்பெறுகிறது.

அதேசமயம், புலிகளின் திட்டவரைவு தங்களுக்குக் கிடைத்ததை ஒட்டியும் - அது தொடர்பான தங்களது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையிலும் இலங்கை அரசும் இன்று கொழும்பில் அறிக்கை ஒன்றை வெளியிடவிருக்கிறது.

அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்துக்காகப் புறப்பட்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழியில் - தற்போது - லண்டனில் உள்ளார். அவரும் புலிகளின் திட்டவரைவின் ஒரு பிரதியை, தற்போது லண்டனில் தங்கியிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமிடம் நேரில் கையளித்து, அந்தத் திட்ட வரைவு குறித்து பூர்வாங்க ஆலோசனை நடத்தவிருக்கின்றார்.

ஆக மொத்தம், சமாதான முயற்சிகளில் முக்கிய பல திருப்பங்களைத் தரக்கூடிய அறிவிப்புக்கள் இன்று கிளிநொச்சியிலிருந்தோ அல்லது கொழும்பிலிருந்தோ அல்லது லண்டனிலிருந்தோ வெளிவரலாம் என பார்வையாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.


இடைக்கால திட்டவரைவின் மூலம் புலிகள் எதிர்பார்ப்பது என்ன? புலிகளின் எதிர்பார்ப்புத் தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன? புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக முஸ்லிம் தரப்பின் பிரதிபலிப்பு என்ன? - இந்த மூன்று கேள்விகளுக்குமான விடையை இன்று தேடிப்பிடிப்பதில் ஊடகவியலாளர்கள் மும்முரமாக இருப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

இந்த முத்தரப்பு நிலைப்பாடு வெளிவரும் கையோடே நான்காவது தரப்பின் கருத்தும் வெளியே 'கக்கப்படும்' என எதிர்பார்க்கலாம். ஜனாதிபதி, அவரது பொ.ஐ.முன்னணி அணியினர் மற்றும் சிஹல உறுமய, ஜே.வி.பி. போன்ற பேரினவாதக் கட்சியினர் ஆகியோரை உள்ளடக்கிய நான்காவது தரப்பின் நிலைப்பாடும் இவ்விடயத்தில் முக்கியமானதாகக் கருத்தூன்றிக் கவனிக்கப்படும்.

ஈழத்தமிழரின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைத்தால் அது குறித்துப் பரிசீலிக்கத் தயார் என்று இவ்வளவு காலமும் கூறிவந்த விடுதலைப் புலிகள், இப்போதுதான் முதல் தடவையாக அத்தகைய தீர்வுத் திட்டத்துக்கு வழிசமைக்கக்கூடிய ஆரம்ப ஏற்பாடான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து தங்கள் தரப்பிலிருந்து ஒரு யோசனையை - திட்ட வரைவை - முன்வைக்கின்றார்கள். புலிகள் தரப்பிலிருந்து தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படும் ஓர் உருப்படியான யோசனை, ஆவணம் என்ற முறையில் இந்தத் திட்ட வரைவு மிக முக்கியத்துவம் பெறுகின்றது. சர்வதேச மட்டத்தில் பல்வேறு தரப்பினரதும் ஆலோசனைகளைப் பெற்று, கலந்துரையாடல்களை நடத்தி, சந்திப்புக்களை மேற்கொண்டே இந்தத் திட்டவரைவுக்குப் புலிகள் உரிய வடிவம் கொடுத்திருக்கின்றார்கள்.

இந்தத் திட்டவரைவை இலங்கை அரசு ஏற்குமா? அது முஸ்லிம்களைத் திருப்தி செய்யுமா? இணக்கநிலை ஏற்பட பேரினவாதிகள் விட்டுக்கொடுப்பார்களா? அரசின் எதிர்பார்ப்புக்குப் புலிகள் இறங்கி வருவார்களா? - என்றெல்லாம் கேட்கப்படும் கேள்விகளுக்கு இன்றும் நாளையும் பல தரப்புகளிலிருந்தும் வெளியாகக் கூடிய செய்திகள், கசியும் தகவல்கள் என்பன பதில் தரக்கூடியவையாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## காலத்தின் பதிவு



இயல்பு...... படம்: தேவா

# மோட்டார் திணைக்களம் நடத்தும் நடமாடும் சேவை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.1

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடத்தும் நடமாடும் சேவை நேற்று ஆரம்பமானது. இன்றும் நாளையும் இச்சேவை தொடர்ந்து இடம்பெறும்.

நேற்றுக்காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் நடமாடும் சேவையை ஆரம்பித்துவைத்தார்.

ஆவணங்களைத் தொலைத்தவர்களுடைய வாகனங்களைப் பதிவுசெய்து புத்தகமும் இலக்கங்களும் நேற்றைய சேவையில் வழங்கப்பட்டன. இவை தவிர உடைமை மாற்றம் செய்தல உட்பட பல்வேறு சேவைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு செயன்முறைப் பரீட்சைகள் பொது நூல்நிலையப் பகுதியில் இடம்பெற்று சித்தியடைந்தவர்களுக்கு தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

ஏற்கனவே சாரதி அனுமதிப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரங்கள் நடமாடும் சேவையில் 550 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

தமது பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதற்கு சுமார் ஆயிரம் பேர் வரையில் நேற்றைய நடமாடும் சேவையில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

சேவையை நடத்துவதற்கென 40 பேர் கொண்ட குழு யாழ். வந்துள்ளது. மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் காமினி செனரத், மேலதிக ஆணையாளர் பீ.டி.சி. தர்மபிரிய, உதவி ஆணையாளர் ஏ.டபிள்யூ.திஸநாயக்க மற்றும் 18 பரீட்சகர்கள் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.(ஓ-5)

# யாழ். காப்புறுதி அலுவலகம் இன்றும் நாளையும் இயங்கும்

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ். செயலகத்தில் நடைபெற்றுவரும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவையை முன்னிட்டு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். அலுவலகம் இன்றும் நாளையும் திறக்கப்பட்டிருக்கும்

- இவ்வாறு கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் திருமதி ஆர்.எஸ்.அரியநாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று ஆரம்பமான மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் நடமாடும் சேவை இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் வாகனப்பதிவு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு வாகனக் காப்புறுதிப் பத்திரம் மற்றும் பயிலுநர் காப்புறுதிப் பத்திரம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இதனைக் கருத்திற்கொண்டே தமது அலுவலகப் பணிகளை இன்றும் நாளையும் வழமைபோல் மேற்கொள்வதற்கு தீர்மானித்திருப்பதாக பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

(ஓ-4)

# மனிதநேய கண்ணியகற்றும் பிரிவால் 1,66,609 வெடிபொருள்கள் மீட்பு!

கிளிநொச்சி,நவ.1

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கடந்த மூன்று வருடங்களில் ஒருலட்சத்து 66ஆயிரத்து 609 வெடி பொருள்களை மீட்டு அழித்துள்ளனர்.

1999ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை 40கோடியே 5லட்சத்து 80ஆயிரத்து 264 சதுர மீற்றர் பரப்பளவில் 82 ஆயிரம் மிதிவெடிகளையும் 86 கண்ணிவெடிகளையும் 62 ஆயிரத்து 542 எறிகணைகளையும் கைக்குண்டுகளையும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மீட்டு அழித்திருக்கின்றனர்.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 6லட்சத்து 26ஆயிரத்து 873 சதுர மீற்றர் பரப்பளவில் 4 ஆயிரத்து 733 மிதிவெடிகளையும் 6 டாங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகளையும் 12ஆயிரத்து 695 வெடி பொருள்களையும் இப்பிரிவினர் அகற்றியுள்ளனர்.

தற்போது எம்.பி.ஏ, டி.பி.ஜி, எவ்.எஸ்.டி, மெட் ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. (ஓ-4)

## நாளை

ஐப்பசி 16
ஞாயிற்றுக்கிழமை
(02.11.2003)
திதி : நவமி
பின்னிரவு 2.09 வரை.
நட்சத்திரம்:திருவோணம்
காலை 7.23 வரை
சுபநேரம்:9.03-10.33
ராகுகாலம்:04.33-06.03
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நாம் அமைத்துக்கொண்டதே வாழ்க்கை. பின்னர் எதற்குக் கவலைப்படவேண்டும்.

'லைசென்ஸ்' செயன்முறைப் பரீட்சை

# நேற்று வராதவர்கள் இன்று தோற்றலாம்

யாழ்ப்பாணம்,நவ.1

சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான எழுத்துப் பரீட்சையில் ஏற்கனவே சித்தியடைந்து நேற்று நடைபெற்ற செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரில் பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் இன்று இடம்பெறும் செயன்முறைப் பரீட்சையில் தோற்றலாம்.

- இவ்வாறு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வந்துள்ள பரிசோதகர் குழுவினர் நேற்று முதல் செயன்முறைப் பரீட்சைகளை நடத்தி வருகின்றனர்.

இதில் நேற்றையதினம் அழைக்கப்பட்டவர்களில் பலர் செயன்முறைப் பரீட்சையில் தோற்றவில்லை என்றும் -

எனவே, நேற்றையதினம் இப்பரீட்சையில் தோற்றத்தவறியவர்களும் இன்று அல்லது நாளை செயன்முறைப் பரீட்சைக்குத் திகதி வழங்கப்பட்டவர்களும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு செயன்முறைப் பரீட்சை இடம்பெறும் பொது நூல் நிலையப் பகுதிக்குத் தேவையான சகல ஆயத்தங்களுடனும் வந்து செயன்முறைப் பரீட்சையில் தோற்றலாம் என்றும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஓ-5)

நெடுந்தீவு கடலில்

# 250 கிலோ எடையுள்ள 'ஓங்கில்' மீன் பிடிபட்டது

நெடுந்தீவு,நவ.1

நெடுந்தீவுக் கடலில் கடந்த செவ்வாய்க்கிழமை சுமார் 250 கிலோ எடை கொண்ட ஓங்கில் எனப்படும் ஒருவகை மீன் பிடிபட்டது.

இதை யாழ். நகருக்கு எடுத்துச்செல்ல முனைந்தபோதும் பொதுமக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனை அடுத்து ஒரு கிலோ நூறு ரூபா என்ற வகையில் ரூபா 25 ஆயிரத்திற்கு இந்த மீன் விற்பனையானது.

30 வருடங்களின் பின் தற்போதுதான் இந்த வகை மீனினம் ஒன்று நெடுந்தீவில் பிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(எ-111)

கடற்படை முகாமில் நிறுத்தாது

# இரவில் மருத்துவச் சேவைப்படகை நெடுந்தீவில் தரிக்க கோரிக்கை

வலி.வடக்கு.நவ.1

நயினாதீவில் உள்ள கடற்படை முகாமில் இரவு நேரங்களில் தரித்து நிற்கும் மருத்துவ சேவைப் படகை இரவு வேளைகளில் நெடுந்தீவில் நிறுத்த வேண்டுமென தீவகப் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

நெடுந்தீவுப் பகுதியில் எவருக்காவது இரவு நேரங்களில் ஏதாவது அவசர மருத்துவ உதவி தேவைப்பட்டு அவரை ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல மறுநாள் காலை படகுச் சேவைக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது என்று அந்த அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆகவே, மருத்துவ சேவைப் படகை இரவு வேளைகளில் நெடுந்தீவில் நிறுத்துவதன் மூலம் தீவகப் பகுதி மக்கள் அதிக பயனைப் பெற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக பிரதேச செயலாளர், அரச அதிபர், பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரையும் தொடர்புகொள்ள பொது அமைப்புகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன. (ஒ-86)

## பங்குச்சந்தை தொடர்பான செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்ப்பாண வர்த்தக, கைத்தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் கொழும்பு பங்குச்சந்தை தொடர்பான செயலமர்வு இன்றும் நாளையும் நல்லூர், செம்மணி வீதியில் உள்ள யூரோவில் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்படி இன்று சனிக்கிழமை காலை 9.30 - 12.30 மணிவரையும் பாடசாலை ஆசிரியர்களுக்கும், பிற்பகல் 2.30 - 5.30 மணிவரையும் வங்கியாளர்களுக்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 - 12.30 மணிவரையும் பல்கலைக்கழக சமூகத்துக்கும், முதலீட்டாளர்களுக்கும் இச்செயலமர்வு இடம்பெறவுள்ளது. (ம-10)

யாழ். போதனா வைத்தியசாலையின்

# பாலியல் தடுப்பு சிகிச்சை நிலையத்துக்கு சுகாதார கல்வி உபகரணங்கள் வந்தன

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ். போதனா வைத்தியசாலையின் பாலியல் நோய்த்தடுப்பு சிகிச்சை நிலையத்துக்கென கொழும்பிலிருந்து சுகாதாரக் கல்வி உபகரணங்கள் எடுத்துவரப்படவுள்ளன.

சுமார் 2 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய இந்த உபகரணங்களை கொழும்பு பாலியல் நோய்த் தடுப்பு மத்திய நிலையப் பணிப்பாளர், யாழ். ஆஸ்பத்திரிக்கு வழங்கியுள்ளார்.

இந்த உபகரணங்கள் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான தடுப்பு பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகப் பயன்படுத்தப்படும் என யாழ். ஆஸ்பத்திரியின் பாலியல் நோய்த் தடுப்புப் பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகர் ஜி. நக்கீரன் தெரிவித்தார்.

பிரசார நடவடிக்கைகள் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பொதுஇடங்கள் எங்கும் பரவலாக கப்படவுள்ளதாகவும் -

இதன் மூலம் தற்போது அதிகரித்துள்ள பாலியல் துஷ்பிரயோகங்கள் குறைவடைய வாய்ப்புள்ளதாகவும் - ஜி. நக்கீரன் மேலும் தெரிவித்தார். (ம-9)

# இவ்வாண்டு நோபல் பரிசு பெறுவோர்

ஒவ்வோர் ஆண்டும் சர்வதேச மட்டத்தில் விழாக்கள், மாநாடுகள் நடைபெறுகின்றன. அவற்றில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொள்கின்றனர். இருப்பினும், அதிக புத்திஜீவிகள் கலந்துகொள்ளும் - வருடாந்தம் விமர்சையாகக் கொண்டாடப்படுவது நோபல் பரிசளிப்பு விழாவாகும்.



பீற்றர் ஆக்ரே (இரசாயனம்) | போல் லூதர்பேட் (மருத்துவம்) | ஷரீன் இபாதி (சமாதானம்) | அலெக்சேயி அபிரிகோசொவ் (பௌதிகம்)

இந்த விழா வருடந்தோறும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்று வருகின்றது.

இவ்வாண்டு இவ்விழாவில் 11



றொட்றிக் மக்கினன் (இரசாயனம்) | அன்ரனி லெகவ் (பௌதிகம்)

பேர் விருதுகளை மற்றும் பரிசுகளைப் பெறுகின்றனர். பௌதிகம், விவசாயம், மருத்துவம், இலக்கியம், பொருளாதாரம் மற்றும் சமாதானம் ஆகிய துறைகளில் அளப்பெரிய சேவைகளைச் செய்தவர்கள் இந்த



றொபட் என்கல் (பொருளாதாரம்) | விடலி கின்ஸ்பேர்க் (பௌதிகம்) | கிளைவ் க்ரன்கர்ட் (பொருளாதாரம்) | பீற்றர் மன்ஸ்பீல்ட் (மருத்துவம்)

விருதுகளைப் பெறவுள்ளனர்.

இலக்கியம் ஏனைய துறைகளை விட சமூகத்துடன் அதிக தொடர்புகளைக் கொண்டுள்ளது. இவ்வாண்டு, இலக்கியத்திற்கான நோபல் பரிசு தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த ஜோன். மக்ஸ்வெல்லுக்கு வழங்கப்படவுள்ளது. இலக்கியத்தைப் போன்றே சமாதானத்துக்குமான பரிசும் வழங்கப்படுகிறது. சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஈரான் நாட்டைச் சேர்ந்த பெண் சட்டத்தரணியான ஷரீன் இபாதிக்கு இவ்வாண்டிற்கான சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்படவுள்ளது.

இவர் மத்திய கிழக்கைச் சேர்ந்த பெண்ணாக இருப்பினும், உலக சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார். சமாதானத்திற்காக இவர் மேற்கொண்ட சேவையை உலகமே போற்றுகிறது. ஈரான் நாட்டின் தெஹிரான் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியை மேற்கொண்ட இவர், அந்நாட்டுப் பெண்கள் மற்றும் சிறுவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் போராடியவர். ஷரீன் இபாதிக்கு 56 வயதாகிறது. இவருக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்படுவது குறித்து எவரும் அதிருப்தி அடையாததற்கான காரணமும் உலகம் அவரது பணிகளை ஏற்கனவே அறிந்திருப்பதே ஆகும்.

நோபல் பரிசாக 9 லட்சம் பவுண்கள் வழங்கப்படுகிறது. இம்முறை பொருளாதாரத்திற்கான பரிசு இருவருக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. அதாவது ஒருவருக்கு நாலரை லட்சம் பவுண்கள் வழங்கப்படுகிறது. நியூ யோர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த றொபட் என்கல்டிற்கும், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிளைவ் க்ரன்கர்ட்டிற்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இவர்கள் இருவரும் பொருளாதாரம் தொடர்பான விசேட விதிமுறைகளை வகுத்துள்ளனர். பொருளாதாரத்துறையைப் போன்றே இவ்வாண்டு மருத்துவத்துறைக்கும் இருவருக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. இலிநொயிஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த போல் லூதர்பேட் என்பவருக்கும், நோடிங் ஹாம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சேர் பீற்றர் மன்ஸ்பில்ட் என்பவருக்கும் மருத்துவத்திற்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது. தற்போதுள்ள எம்.ஆர்.ஐ ஸ்கானிங் (M.R.I.SCA-NNING) உபகரணத்திற்கு பல முன்னேற்றங்களை மேற்கொண்டதற்காக இவர்களுக்கு மருத்துவத்திற்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

இவ்வாண்டு நீர் மற்றும் வெப்பம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்ட இருவருக்கு இரசாயனத்திற்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது. அமெரிக்காவிலுள்ள ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பீற்றர் ஆக்ரே என்பவருக்கும், அமெரிக்காவிலுள்ள றொக்பெல்லர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த றொடறிக் மக்கினன் என்பவருக்கும் இரசாயனத்திற்கான பரிசு பகிர்ந்து வழங்கப்படுகிறது.

**தொகுப்பு: கஜனி**

நோபல் பரிசு வழங்க ஆரம்பித்த காலம்தொடக்கம் பௌதிகம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதில் பல விஞ்ஞானிகள் ஆர்வங்காட்டினர். இவ்வாண்டு பௌதிகத்திற்கான விருது அமெரிக்காவில் வாழ்ந்துவரும் ரஷ்ய நாட்டவரான அலெக்சேயி அபிரிகோசொவ் என்பவருக்கும், ரஷ்யாவைச் சேர்ந்த விடலி கின்ஸ்பேர்க் என்பவருக்கும், அமெரிக்காவைச் சேர்ந்த அன்ரனி லெகவ் என்பவருக்கும் பகிர்ந்து அளிக்கப்படவுள்ளது.

இவ்வாறு வருடந்தோறும் வழங்கப்படும் நோபல் பரிசு பெற்றவர்களின் பெயர்களை அறிவிப்பது மற்றும் அந்தப் பரிசை வழங்குவது தொடர்பாக காலவரையறை உள்ளது. பரிசு பெற்றவர்களின் விவரங்கள் வருடந்தோறும் ஒக்ரோபர் மாதத்தில் அறிவிக்கப்படும்.

அதேபோல, பரிசளிப்பு வைபவம் வருடந்தோறும் டிசெம்பர் 10 ஆம் திகதி நடைபெறும். பரிசுகள் யாரால் வழங்கப்படும் என்பதை சுவீடன் நாட்டின் தலைநகரான ஸ்ரொக்ஹோம் நகரில் இயங்கும் நோபல் அடிப்படை மன்றத்தினால் தீர்மானிக்கப்படும். இவ்வாண்டு சுவீடன் மன்னரான 10 ஆவது கால் குஸ்டாப் மன்னரால் நோபல் பரிசை வழங்குவது என அந்த மன்றம் தீர்மானித்துள்ளது. இவ்வாண்டு நோபல் பரிசைப் பெறுபவர்களுக்கு விருதும், பரிசும் மட்டுமல்ல சுவீடன் மன்னரின் விருந்துபசாரமும் கிடைக்கவுள்ளது.

நிமால் கொலைவழக்கு:

# 5ஆவது சந்தேகநபரின் மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்கப் பணிப்பு

## யாழ். நீதிவான் விடுத்தார்

யாழ்ப்பாணம்,நவ.1

ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை வழக்குச் சம்பந்தமான 5 ஆவது சந்தேக நபரான உதயபாலன் என்பவரின் மருத்துவ அறிக்கையை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியிடம் இருந்து பெற்று எதிர்வரும் 14ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர், சம்பவம் தொடர்பாக தன்னிச்சையான வாக்குமூலம் அளிக்க விரும்பவில்லை என்றும் -

தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் தாக்கப்பட்டமை குறித்து வாக்கு மூலம் அளிக்கப்போவதாகவும் நீதிவானிடம் தெரிவித்தார்.


சம்பவம் தொடர்பாக மட்டுமே தன்னிச்சையான வாக்குமூலம் அளிக்க முடியும் எனத் தெரிவித்த நீதிவான், மேல்விசாரணையை அடுத்தமாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (எ-3-8)

# மக்கள் முகம்



தென் இலங்கை கொட்டராமுல்லையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி அம்பாள் குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா அமிர்தலிங்கம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். பிரபல சமய, சமூக சேவையாளராகிய இவர் அம்பாள் குளம் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத் தலைவரும், தேசிய புனரமைப்புக் குழு பொருளாளருமாவார். அத்துடன், வேறு பல பொது நிறுவனங்களிலும் சமய நிறுவனங்களிலும் இணைந்து பல சமய, சமூக சேவைகளாற்றி வருகின்றார். (எ)

* * *



குமுழமுனையைப் பிறப்பிடமாகவும், ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கிராமசேவையாளர் கனகையா மகேந்திரன், நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டு பதவியேற்றுள்ளார்.

அதிசிறப்புதர கிராமசேவையாளரான இவர், பிரபல சமய, சமூக சேவையாளருமாவார். அத்துடன், தமிழ் இலக்கிய ஆர்வலரும், பிரபல கவிஞருமாவார். கிளிநொச்சி தமிழ்சங்கம், ஸ்கந்தபுரம் முருகன் ஆலயம், கரும்புத்தோட்ட பிள்ளையார் ஆலயம், ஸ்கந்தபுரம் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றிலும் முக்கிய பதவிகளை வகித்து பல சேவைகளை செய்து வருகின்றார். (எ)

* * *



அம்பாறை மாவட்ட சமூக நலவாழ்வு அமைப்பின் ஸ்தாபகரும், இணைப்பாளருமான சண்முகம் ஜெந்துராசா, தென்ஆசிய பிராந்திய மட்டத்தில் நடைபெறும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் 'சமூகங்களின் பங்கு' என்ற தொனிப்பொருளிலான மாநாட்டில் பங்கேற்பதற்காக ராஜஸ்தான் பயணமானார்.

பல்வேறு சமூகசேவை நிறுவனங்களின் ஸ்தாபகராகவும், தலைவராகவும் பணியாற்றிவரும் இவர், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

கடந்த பத்து வருடத்திற்கு மேலாக பல்வேறு நாடுகளில் நடைபெறும் சர்வதேச மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் பங்குபற்றி வரும் இவர் கரவெட்டியைச் சேர்ந்த சண்முகம் சரஸ்வதி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வராவார். (எ)

* * *



நெடுந்தீவு மத்தியைச் சேர்ந்த திரு. திருமதி வைத்திலிங்கம் தம்பதிகளின் புதல்வன் வைகுகராசா 30.10.2003 வியாழன் அன்று யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நெடுந்தீவு ம.வி., உருத்திரபுரம் ம.வி. ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், தற்போது கரைச்சி தெற்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாசத்தின் தலைவராகவும் உள்ளார். (எ)

* * *



யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் வீதியை சேர்ந்த, முன்னாள் விமானப்படை உடற்கல்விப் பயிற்சியாளர் மனாசை டேவிட் தம்பிராஜா, அண்மையில் யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

விளையாட்டுத் துறையில் சிறந்த வீரராகவும், பயிற்றுவிப்பாளராகவும், ஆசிரியராகவும் விளங்கி வருகின்ற இவர், அரச அங்கீகாரம் பெற்ற தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளரும் ஆவார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், யாழ்.மத்திய கல்லூரியில் தற்காலிக ஆங்கில வருகை ஆசிரியராகவும் பணியாற்றுகின்றார். (எ-4)

பொதுசன நூலகம்

# வீதி விபத்துக்களைத் தடுக்க இயலுமானவரை முயற்சிப்போம்

**நவம்பர் மாதம் முதல் வாரம் போக்குவரத்துப் பாதுகாப்பு விழிப் புணர்ச்சி வாரமாகப் பிரகடனப் படுத்தும் முகமாக இக்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.**

வாகன விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பதையும், இதனால், உடல் ஊனம், உயிர்ச்சேதம், வாக னச்சேதம் அதிகரிப்பதையும் பத்தி ரிகைகள் மூலமாகவும், யாழ் போதனா வைத்தியசாலைப் புள்ளிவிபரங்கள் மூலமாகவும் அறிகின்றோம். வாகன விபத்துக்களுக்கு நாமே பொறுப்பு. நாமே இதனைப் பற்றிய விழிப்புணர்வை எம் மத்தியில் ஏற்படுத்தவேண்டும். விபத்துக்கள் ஏன் நடக்கின்றன? அதன் விளைவுகள் என்ன? அவற்றை எப்ப டித் தவிர்க்கலாம்? என்பவற்றைப் பற் றிச் சிந்திக்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

நாம் எப்படி மற்றவர்களைத் திருத் தலாம்? இது இயலாத காரியம் என்ற தப்பபிப்பிராயம் எழலாம். இதற்காக நாம் வாளாதிருப்பது தர்மமல்ல. நாம் ஒவ்வொருவரும் நம்மைத் திருத்திக் கொண்டால் சமூகம் தானாகவே திருந்திவிடும். ஆகவே, தன்னம்பிக்கை யுடனும், இறை நம்பிக்கையுடனும் இச் சமூகத் தொண்டை நாம் மேற்கொள்ள வேண்டும். நாம் எல்லோரும் அதாவது பாடசாலைகள், அரச திணைக்களங் கள், கல்வி நிறுவனங்கள், வியாபார நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், மத நிறு வனங்கள், பொது ஊடகங்கள் ஒன்று சேர்ந்து செயற்பட்டால் வெற்றி கிடைக்கும்.

### விபத்துக்கள் ஏன் நடக்கின்றன?

1) தெருக்களின் சீர்கேடான நிலைமை. பள்ளங்கள், தடைகள் இருப்பதால் வாகனங்கள் சடுதியாக விலகிப்போக வேண்டியுள்ளது.

2) வாகனங்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ள வேளை யில், தெருக்களின் அகலமோ அல் லது எண்ணிக்கையோ பெருகவில்லை.

3) பிரதான வீதிகளிலும், சந்தி களிலும், தெரு அடையாளங்களும் கோடுகளும் இல்லாமை. தெருக்கள் குறுக்கிடும் இடங்களில் எது பிரதான வீதி, எது பக்க வீதி என்ற அடை யாளங்கள் போடப்படாதமை. இதனால், வாகனங்கள் யார் யாருக்காக விட்டுக் கொடுக்கவேண்டுமென்று தெரியாததி னால் விபத்துக்கள் நடக்கின்றன.

4) தெருவின் நிலைமைக்கும், வாகன நெருக்கடிக்கும் ஒவ்வாத வாகனவேகம். அநேகமானோர் காரண மின்றி அதிவேகத்தில் வாகனங் களைச் செலுத்துகிறார்கள். யாழ்ப் பாணத்தில் வாழ்க்கை வேகம் அவ்வ ளவாக அதிகரிக்காதவேளையில், மேலதிக வேகத்தில் வாகனத்தைச் செலுத்தவேண்டிய அவசியமில்லை. வீதிகளில் வாகன வேகக் கட்டுப் பாட்டை அறிவுறுத்தும் தகவல்/கட் டளைப்பலகைகள் இல்லாமலிருப் பதும் விபத்துக்குக் காரணம்.

"பயணத்தை நேரத்திற்கே தொடங்கி, மெதுவாகச் சென்று பாது காப்பாக இடத்தை அடைய வேண் டும்" என்று பகவான் சத்திய சாயி பாபா கூறியுள்ளார். இக்கூற்று ஆன் மீகப் பயணத்திற்கு மாத்திரமன்றி வாழ்க்கைப் பயணத்திற்கும் பொருந்தும்.

5) வாகனத்தை ஓட்டும் தகுதி பெற முன்பே, அதாவது சாரதி அனு மதிப்பத்திரம் பெறுமுன்பே அதி வேகத்தில் வாகனங்களைச் செலுத் துதல் இன்னமொரு காரணமாகும்.

6) ஓட்டுபவர் மாத்திரமன்றி, வாக னமும் தகுதியுடையதாக இருக்க வேண்டும். வேகத் தடுப்புகள், சில்லு, டயர்கள், ஒலிச் சமிக்ஞைகள் சரி யாக வேலை செய்யாவிட்டாலும் விபத்துக்கள் ஏற்படும்.

7) மதுபானம் அருந்தி வாகனத் தைச் செலுத்தினால் விபத்து நேரும் சந்தர்ப்பம் அதிகரிக்கிறது.

வைத்திய கலாநிதி
**இ.கணேசமூர்த்தி**
இளைஞர் இணைப்பாளர்,
வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி
சேவா நிறுவனம்

8) வீதி ஒழுங்கு முறைகள் தெரி யாமை அல்லது பின்பற்றாமை விபத் துக்கு முக்கிய காரணம். சரியான சைகைகள் கொடுக்கத் தெரிவதில்லை; மற்றைய வாகனத்தின் சமிக்ஞைகள் விளங்குவதில்லை. மேலும் யார் யாருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று தெரியாமை அல் லது பொறுமையின்மையும் விபத்துக் குக் காரணம்.

9) வாகனத்தைச் செலுத்தும் போது செல்போனில் கதைப்பதினால் கவனக்குறைவு ஏற்பட்டு விபத்துக் கள் நிகழ்ந்துள்ளன.

10) பாதசாரிகளும், பிராணிகளும் தாறுமாறாக வீதியில் குறுக்கே போவதும் இன்னுமொரு காரணம். வீதியிலே சிறு பிள்ளைகளுக்கும், முதியோர்களுக்கும், ஊனமுற்றோர் களுக்கும், பிராணிகளுக்கும், அம்பு லன்ஸ் வண்டிக்கும் முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்றும் பலருக் குத் தெரியாது. இன்னும் பல கார ணங்கள் இருந்தாலும் மேற்கூறிய வையே முக்கிய காரணங்களாகும்.

### விபத்துக்களின் விளைவுகள் என்ன?

★ உயிர்ச்சேதமே மிகவும் பார தூரமான விளைவு. உயிரிழந்தவர் குடும்பத் தலைவன் அல்லது உழைப் பாளியாகவிருந்தால், பாரதூரமான தாக்கம் ஏற்படும். குடும்பத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

★ உடல் ஊனமடைதல் அல்லது உறுப்புக்களை இழத்தல் முன்னை யதைப்போல் ஒரு பாரதூரமான விளைவு. இதனால், பொருளாதாரக் கஷ்டம், ஆட்பலமின்மை பணவிரயம், உத்தரவாதமின்மை, உளவளத் தாக் கம் ஆகியன ஏற்படலாம்.

★ வாகனச்சிதைவு பொருளாதா ரக் கஷ்டத்தை ஏற்படுத்தும். மேலும் பாரிய விபத்துக்களினால் பாலங்கள், மதகுகள், சுவர்கள், மின்கம்பங்கள், தெருவோர வீடுகளும் கடைகளும் நாசமடையலாம்.


### விபத்துக்களையும் இதன் விளைவுகளையும் எவ்வாறு தவிர்க்கலாம்?

★ உள்ளூராட்சி மன்றங்களும் நெடுஞ்சாலைத் திணைக்களமும் தெருக்களைச் சீராக்கவேண்டும். மோட்டார் போக்குவரத்துத் திணைக் களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டாயச் சைகைகள், முன்னுரிமைச் சைகைகள், தகவல் சைகைகள் தெருக்களில போடப்பட்டிருக்கவேண் டும். தெருக்களில் கோடுகள் போடப் படவேண்டும்.

★ பாதசாரிகளும் வாகனசாரதி களும் வீதி ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

★ மோட்டார் சைக்கள் சாரதியும் பயணியும் தலைக்கவசம் அணிவதன் மூலம் பாரதூரமான தலைக்காயம் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

★ வீதியோரத்தில் வசிப்பவர்கள் தங்களது பிள்ளைகளையும் பிராணி களையும் வீதியில் குறுக்காகத் திரி வதைத் தடுக்கவேண்டும்.



★ சட்டப் பாதுகாப்பாளர்கள், தீவிர மாகவும் நேர்மையாகவும் செயற்பட வேண்டும்.

★ பாடசாலை மாணவர்களுக்கும், வாகன சாரதிகளுக்கும் பொது இடங் களிலும், பாடசாலைகளிலும், செயல மர்வுகள், விபத்துச் செய்கைகள் மூலம் விளக்கமும் விழிப்புணர்வும் கொடுக்கவேண்டும்.

விபத்துக்கள் விளைவதை முற் றாக இல்லாமற் செய்யமுடியாவிட் டாலும், நாம் எமது நடத்தையின் மூலம் பெருமளவு குறையச் செய்ய லாம்.

இதற்குச் சட்டம் உதவி செய் தாலும், எம்மில் இதயபூர்வமான மாற் றம், விழிப்புணர்வு எழவேண்டும். சட் டத்திற்குப் பயந்து ஒழுங்காக நடப் பவர் சட்ட ஒழுங்குநர்கள் இல்லாத போது ஒழுங்கைக் கைவிட்டுவிடுவார். மாறாக இதயபூர்வமாக ஒழுங்குகளை ஏற்றுக்கொண்டவர் தானாகவே உணர்ந்து ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பார். ஒழுங்கு, கட்டுப்பாடு இல்லாவிடில் முன்னேற்றம் கிடை யாது. அழிவுதான் கிடைக்கும்.

விபத்தினால் ஏற்படும் பொருளா தாரக் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய காப்புறுதி செய்துகொள்ளுவதும் மற்று மொரு வழி.

நான்தான் வாழவேண்டுமென்ற நிலையிலிருந்து மற்றவரும் வாழ்ந்து நானும் வாழவேண்டுமென்ற உன்னத நிலைக்கு மாறவேண்டும்.

*"சிந்தியுங்கள் - சில விநாடிகள்*
*நில்லுங்கள் - ஒரு நிமிடம்*
*வாழுங்கள் - பல ஆண்டுகள்"*
*"எலும்பு முறிய ஒரு கணம் எடுக்கும்*
*எலும்பு பொருந்த பல கிழமைகள் எடுக்கும்"*



## இன்று முதல் ஒரு வார காலம் போக்குவரத்து பாதுகாப்பு வாரம்

---

# காணாமற்போனோர் குறித்த விசாரணைகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ். குடாநாட்டில் கைதுசெய்யப் பட்டுப் பின்னர் காணாமற்போனவர்கள தொடர்பான விசாரணைகளை மேற் கொள்வதற்காக அவர்களது பெற் றோர் அல்லது உறவினர்களை சாட்சி யாளர்களுடன் பொலீஸ் நிலையத் துக்கு வருகைதருமாறு குற்றப் புல னாய்வுப் பொலீஸார் கேட்டுள்ளனர்.

எதிர்வரும் 5ஆம் திகதி கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் விசாரணை இடம்பெறவுள்ள காணாமற்போனவர் களின் விவரம் வருமாறு:-

★ குலரத்தினராஜா செந்தூரன், சுதா பேக்கரி வீதி, உரும்பிராய் மேற்கு, (கோ.இல.113).

★ கயிலேஸ் நவரத்தினம், கோப் பாய் வடக்கு (கோ.இல.154).

★ கல்யாணி சுதர்ஷன், நீர்வேலி வடக்கு, மானிப்பாய் (கோ. இல.158).

★ மார்க்கண்டு நாகேஸ்வரன், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு(கோ.இல.264).

★ நல்லதம்பி விக்னேஸ்வரன், திருநெல்வேலி (கோ.இ.323).

★ பத்மநாதன் பத்மராஜா, திரு நெல்வேலி சந்தி (கோ.இல.351).

★ பிரபாகரன் நடராஜா, கோப் பாய் வடக்கு, கோப்பாய் (கோ. இல.392).

★ ராஜதுரை ஜயப்பிரகாஸ், இல.9/1, பிரடானந்த ஒழுங்கை, நீர் வேலி (கோ.இல.407).

9 ராஜரத்னம் சிறீதரன், டச் வீதி, கோப்பாய் தெற்கு (கோ.இல.411).

★ ராசமனோகரன் தயாபரன், புகை யிரத நிலைய வீதி, கோண்டாவில் (கோ.இல.429).

★ நடராஜா சிறிதரன், சுன்னா கம் மேற்கு (கோ.இல.311).

★ சிகாமணி சுகந்தன், கற்பக பிள்ளையார் கோவிலடி, இணுவில் மேற்கு, சுன்னாகம்(கோ.இல.551).

★ அன்டன் ஜோசப், நாவற்குழி (கோ.இல.25).

★ கே.நேசகுமார், கோண்டாவில் (கோ.இல.145).

★ பாலசிங்கம் பாலகுமார், திரு நெல்வேலி (கோ.இல.52).

★ செல்லையா கந்தசாமி, கோண் டாவில் (கோ.இல.74).

எதிர்வரும் 5ஆம் திகதி சாவகச் சேரி பொலீஸ் நிலையத்தில் விசாரணை இடம்பெறவுள்ள காணாமற்போனவர் களின் விவரம் வருமாறு:-

★ கந்தையா கனகு, மந்துவில் கிழக்கு (கோ.இல.186).

★ எம்.மதிகரன், 75, பொன்னம் பலம் வீதி, அரியாலை (கோ.இல.247).

★ நடராஜா ஜோதிகரன், மட்டு வில் கிழக்கு, (கோ.இல.293).

★ இளயவன் சண்முகலிங்கம், மறவன்புலவு கிழக்கு, சாவகச்சேரி (கோ.இல.118).

★ கே.சண்முகலிங்கம், கைதடி (கோ.இல.150).

★ கிருஷ்ணமூர்த்தி தேவநேசன், தனங்களப்பு, சாவகச்சேரி (கோ. இல.151).

★ கண்ணதாசன் (தயாளன்), கைதடிச்சந்தி (கோ.இல.1[illegible]).

★ எஸ்.மோகன், தச்சன்தோப்பு, நாவற்குழி (கோ.இல.274).

★ என்.பத்மசேகர், தச்சன்தோப்பு, நாவற்குழி (கோ.இல.294).

★ எஸ்.சதீஸ்வரன், கோவிலாக் கண்டி (கோ.இல295).

★ நடராசா கதுகரன், நாவற்காடு, வரணி (கோ.இல.308).

★ புஷ்பராணி ராமன், நவாலி, இயற் றாலை, (கோ.இல.396).

★ ஆர்.சுதாகரன், நாவற்குழி, கைதடி (கோ.இல.403).

★ செல்லப்பா சிவநேசன், மட்டு வில் வடக்கு (கோ.இல.508).

★ கனகரத்தினம் கிரிதரன், கைதடி (கோ.இல.160).

★ கே.சண்முகலிங்கம், கைதடி (கோ.இல.150).

★ தேவநேசன் தனங்களப்பு, (கோ.இல.151).

எதிர்வரும்6 ஆம் திகதி அச்சுவேலி பொலீஸ் நிலையத்தில் விசாரணை இடம்பெறவுள்ள காணாமற்போனவர் களின் விவரம் வருமாறு:-

★ பாலசுப்பிரமணியம் துஷ்யந் தன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு (கோ.இல.56).

★ குமாரசாமி சந்திரகுமார், புத் தூர் கிழக்கு (கோ.இல.233).

★ மோகன்ராஜா, கவிதாபுரம், தெல்லிப்பழை (கோ.இல.275).

★ பாமா சதானந்தம், புத்தூர் கிழக்கு (கோ.இல.356).

எதிர்வரும் 6ஆம் திகதி கொடி காமம் பொலீஸ் நிலையத்தில் விசா ரணை இடம்பெறவுள்ள காணாமற்போன வர்களின் விவரம் வருமாறு:-

★ நடராசா செந்தூரன், மீசாலை தெற்கு.

★ புஷ்பராணி ரமணன், இயற் றாலை, கொடிகாமம்.

★ அமிர்தலிங்கம் அப்புகுட்டி, நாவற்குழி.

எதிர்வரும் 7ஆம் திகதி பருத்தித் துறை பொலீஸ் நிலையத்தில் விசா ரணை இடம்பெறவுள்ள காணாமற் போனவர்களின் விவரம் வருமாறு:-

★ கனகசபை வைத்தியலிங்கம், அச்சுவேலி (கோ.இல.163).

★ கந்தசாமி சிவசக்திவேல், வடு வணை, புலோலி மேற்கு, பருத்தித் துறை (கோ.இல.183).

★ கந்தையா குணரத்தினம் விக்ன ராஜா, வைரவர் கோவில் வீதி, வத் தனை, புலோலி மேற்கு (கோ. இல.206).

★ டபிள்யூ.கோணேஸ்வரன், வெள்ளையன் வீதி, தும்பளை. (கோ.இல.292).

★ ஆர்.யோகேந்திரராஜா, இல. 174/A., ஆதிகோவிலடி, வல்வெட்டித் துறை (கோ.இல.405).

(ஓ-ரி)

---

பொ.ஐ.முவை கடுமையாக விமர்சித்த

# பசறை பி.ச. உறுப்பினர் பேரின்பநாதன் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார்

பசறை பிரதேச சபையின் எதிர் கட்சி உறுப்பினரான பி.பேரின்ப நாதன் நேற்றுமுன்தினம் சபைக்கூட் டம் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியைக் கடுமையாக விமர்சித்துவிட்டு ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி யில் இணைந்துகொண்டார்.

இவர் கடந்த பிரதேச சபைத் தேர் தலில் டி.வி.சென்னன் தலைமையி லான ஐக்கிய இலங்கை ஜனநாயக முன்னணி சார்பில் 'மீன்' சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

கடந்த தீபாவளித் தினத்தில் கொழும்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியினால் நடத்தப்பட்ட ஆர்ப் பாட்டப் பேரணியை வன்மையாகக் கண்டித்ததுடன், நாடாளுமன்றத்தில் தமிழ்க்கூட்டமைப்புடன் இணைந்த வி.புத்திரசிகாமணி எம்.பியை ஆதரித் தும் பேரின்பநாதன் உரை நிகழ்த்தி னார்.

ஆளும் கட்சி வரிசையில் அமர்ந்த பேரின்பநாதனை ஆளும் கட்சி உறுப்பினர்கள் பெரும் ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் : 10.05.1945

மறைவு : 18.09.2003

அன்பான பேச்செங்கே? அமுதமான குணங்
காட்டும் பாசமுகமெங்கே?
பண்பான பார்வையெங்கே? பரிவுடன்
அணைத்த கரங்களெங்கே?
எந்நாளும் உமை நினைந்தே
கண்ணீர் நாம் வடிக்கின்றோம்.
ஆசை முகங்கண்டு அதிக நாளாச்சே!
அன்பு மொழி கேட்டு எத்தனை நாள்?
உள்ளம் பதை பதைக்க ஒன்றுமே பேசாமல்
எங்குதான் சென்றீர் எமைவிட்டு?
கள்ளங் கபடமற்ற நெஞ்சுடையவரே!
கலங்குகின்றோம் நாம் கதிகலங்கி
ஏங்கியே அழுகின்றோம் இங்கே
இரங்கி ஒருமுறை வாரீரோ?

அமரர்

## ஆறன் சிந்தாமணி

உடுப்பிட்டி.

P.பிருந்தன், P.பகிரதன்,
S. மௌலிகா (பேரப்பிள்ளைகள்).

(24137) UTHAYAN Graphics

## இவரையும் நினைவு கூருகின்றோம்

தோற்றம் : 19.02.1972

மறைவு : 01.04.2001

செல்வி

## ஸ்ரீ ஜெயதேவி சிந்தாமணி



உடுப்பிட்டி.

P.பிருந்தன், P.பகிரதன்,
S.மௌலிகா (பேரமக்கள்).

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# மனித உயிர்களை காவுகொள்ள அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள்!

**தற்போது நாளுக்கு நாள் வீதி விபத்துக்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. சாரதிகளின் கவனக்குறைவினாலேயே பெரும்பாலான விபத்துக்கள் ஏற்படுகின்றன. மனித உயிர்கள் பறிக்கப்படுகின்றன. இவ்வாறு மனித உயிர்களைப் பறிக்க வழங்கப்பட்டதுதானா சாரதி அனுமதிப்பத்திரம் என்ற கேள்வி தற்போது எழுப்பப்படுகிறது. வீதி விபத்துகள் குறித்து ஆராயும் இக்கட்டுரை 'லங்காதீப' நாளிதழில் வெளிவந்தது. அக்கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

மனித வாழ்க்கைக்கு அளப்பரிய சேவையாற்றும் மோட்டார் வாகனங்களே சில சமயம் மனித உயிரைப் பறிப்பதற்குக் காரணமாய் அமைவது கவலைக்குரியதொரு விடயமாகும். இவ்வித நிகழ்வுகளை அதாவது பொது மக்கள் வாகன விபத்துக்களில் சிக்கி உயிரிழக்கும் நிகழ்வுகளை - கேள்விப்படவோ, பத்திரிகைகளில் வாசிக்கவோ அல்லது நேரடியாகக் கண்ணால் காணவோ தற்போது அதிக வாய்ப்புகள் நமக்குக் கிடைக்கினறன.

இவ்வகையிலமைந்த திகில் மிக்க சம்பவமொன்று அண்மையில் காலி மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது. 'இன்ரசிற்றி' பயணிகள் வாகன



மொன்றை அதிவேகமாகச் செலுத்திச் சென்ற வாகன சாரதி வீதியில் சென்ற அப்பாவி மனிதர் ஒருவரை மோதித்தள்ளி, நாயொன்றை நசுக்கி விட்டு தொடர்ந்தும் வாகனத்தைச் செலுத்தினார். அவரது அச்செய்கையால் ஆத்திரமடைந்த அவ்வாகனத்தில் பயணம் மேற்கொண்ட பயணிகள அவ்வாகனத்தை காலி பொலீஸ் நிலையத்திற்கு திசைதிருப்பிக் கொண்டு சென்றனர்.

இன்று வீதியில் பயணிப்போர் இவ்வகை கொலைகாரர்களான சாரதிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது. ஆனால், இக்கொலைகாரர்களோ எவ்வித இரக்கமுமின்றி பாதசாரிகளுக்கான மஞ்சள் கோட்டில் நடப்போரைக்கூட மோதித்தள்ளி விட்டுச்செல்கின்றனர்.

சாரதிப் பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெற்ற இச்சாரதிகளுக்கு வீதிகளில் வாகனம் செலுத்தும் ஒழுங்கு விதிகள் தொடர்பான எவ்வித அறிவும் இல்லாமையே இவ்வித வாகன விபத்துக்களுக்கான முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், பெருமளவில் அதிகரித்துவரும் வாகன இறக்குமதி காரணமாக அவற்றைச் செலுத்துவதற்கான சாரதிகளின் தேவையும் அதிகரிப்பதால் நினைத்த நினைத்த விதத்தில் அனுபவமற்ற சாரதிகளின் தொகையும் அதிகரிக்கின்றன. வீதிப்பயண் ஒழுங்கு விதிகள எவ்வாறான போதும், வாகனமொன்றை வீதியில் செலுத்தத் தெரிந்திருப்பது மட்டுமே சாரதி ஒருவருக்குரிய தகுதியாகுமென அவர்கள் எண்ணுவதால் வாகன சாரதித் தொழில் தவறான கணிப்பீட்டுக்கு ஆளாகியுள்ளது. இவ்விதம் அதிகரித்துள்ள வாகனசாரதிகளில் பெரும்பாலானோர் தமது தகுதியீனம் காரணமாக விபத்துக்களுக்கு காரணகர்த்தாக்களான போதிலும் கடைசியில் பாதிப்புக்குள்ளாவது அப்பாவிப் பொதுமக்களே.

1995ஆம் ஆண்டில் ஸ்ரீலங்காவின வாகன விபத்துக்களில் சிக்கி உயிர் இழந்தோர் தொகை ஆயிரத்து 681ஆக இருந்தாலும், அத்தொகை 2001ஆம் ஆண்டில் 2ஆயிரத்து 159வரை உயர்வடைந்துள்ளமை இதனைத் தெளிவாகக் காட்டுகின்றது.

மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள், அவற்றைப் பணம் செலுத்தி வாங்கக் கடன் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் வாகனச் சாரதிப் பயிற்சி நிலையங்கள ஆகிய எவையுமே வாகன விபத்துக்கள் தொடர்பாக எவ்வித அக்கறையும் செலுத்துவதில்லை. வாகன விபத்துக்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களும் பொலீஸ் திணைக்களத்தின் மீதும் அரசின் மீதுமே சுமத்தப்படுகின்றன.

இவ்வித வாகன விபத்துக்களைத தவிர்த்துக் கொள்வதற்கான ஆலோசனைகளைப் பொலீஸ் திணைக்களம் வழங்கி வருகிறது. ஆனால், அண்மையில் வாகன விபத்தின் மூலம் மரணம் விளைவித்த வாகனச் சாரதிகளுக்கெதிராக பொலீஸார் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதை நிறுத்தும் முயற்சியில் வாகனச் சாரதிகளுக்கு பாதுகாப்பளிக்கும் சங்கங்கள் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது. ஆனால், இவ்வகை நிறுவனங்கள் பொதுமக்களுக்கு மரணத்தை ஏற்படுத்தும் வாகனச் சாரதிகளுக்கெதிராக எவ்வித சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முன்வருவதில்லை.

ஸ்ரீலங்காவில் இடம்பெறும் வாகன விபத்துக்களில் 80சதவீதத்துக்கும் மேற்பட்டவை சாரதிகளின் கவனயீனத்தாலேயே இடம்பெறுகின்றன. பாதையில் வாகனம் செலுத்தும் ஒழுங்கு விதிகள் பற்றி சிறிதளவேனும் அறிந்திருக்காமை, உடல் அவயவங்களின இயக்கக் குறைபாட்டுடன் வாகனங்களைச் செலுத்துதல் மற்றும் அளவுக்கதிக மதுபோதையுடன் வாகனத்தைச செலுத்துதல் ஆகியவை பெரும்பாலான வாகன விபத்துக்களுக்கான முக்கிய காரணங்களாக அமைகின்றன. ஸ்ரீலங்காவில் இடம்பெறும் பெரும்பாலான வாகன விபத்துக்களில் பொது மக்கள் பயணிக்கும் வாகனங்களே சம்பந்தப்படுகின்றன. இவை இவற்றின சாரதிகளின் கவனக்குறைவினாலும், அவர்கள் தளர்ச்சியுற்ற தன்மையுடன வாகனத்தைச் செலுத்துவதாலும் ஏற்படுகின்றன. இவை தொடர்பாக பொலீஸார் வாகனச் சாரதிகளுக்கு பற்பல அறிவுறுத்தல்கள் வழங்கிய போதிலும அவர்கள் அவற்றைப் பின்பற்றி நடப்பதில்லை. இதன்மூலம் அவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்கத் தவறுவதை அவதானிக்க முடிகிறது.

இன்று உலகில் மிக முன்னேற்றம் கொண்ட நாடான சிங்கப்பூர் வாகனச் சாரதிகளின தவறுகளுக்குக் கடும் அபராதம் விதிப்பதன் மூலம் அவர்களது தவறுகளைக் கட்டுப்படுத்தி வருகிறது.

நமது நாட்டில் இதற்கு முற்று முழுதான வேறுபாடான நடை முறையே கடைப்பிடிக்கப்படுகிறது. பாரதூரமான தவறிழைக்கும் ஒரு வாகனசாரதி அதற்காகச் சிறு அபராதத்தைச் செலுத்துவதன் மூலம் அத்தவறிலிருந்து விடுபட்டுக் கொள்ளமுடிகிறது. ஆனால், சிங்கப்பூரில் இவ்வகைத் தவறிழைக்கும் வாகனசாரதிகள் அதற்கான அபராதமாகப் பெருந்தொகைப் பணம் செலுத்த வேண்டியுள்ளது. இதன் காரணமாக அந்நாட்டு வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன், வீதி ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்தும் வாகனங்களைச் செலுத்தும் வழக்கத்தைக் கைக்கொண்டுவருகின்றனர்.

ஸ்ரீலங்காவில் தற்போது அதிவேகத்துடன் வாகனம் செலுத்திச் செல்லத்தக்க நவீன வீதிகள் கிடையாது. வளர்ச்சி அடையும் நாடொன்றில் காணப்படும் பலதரப்பட்டசாலைகள் கொண்ட அபிவிருத்தி குறைந்த பாதை அமைப்பு முறையே இங்கு காணப்படுகிறது. ஆனால், இச்சாலைகளில் சாரதிகள் தமக்கு இஷ்டமான விதத்தில் தமது வாகனங்களைச செலுத்த முனைகின்றனர். வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காது வாகனங்களைச் செலுத்துவதை கொழும்பு நகரில் காணக்கூடியதாகவுள்ளது. இரவு வேளைகளில் பல வாகன சாரதிகள் மதுபோதையுடன் வாகனங்களைச் செலுத்தி வருவதாக போக்குவரத்துப் பொலீஸ் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வித குற்றங்களுக்காகப் போக்குவரத்துப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட வாகனசாரதிகளில் பலர் இதற்கு முன்னர் பல தடவைகள் இவ்வகைக் குற்றங்களைப் புரிந்திருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இதன்படி மதுபோதையுடன் வாகனம் செலுத்தும் சாரதிகளின் வாகனஞ் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரத்தை ஒரு வருட காலத்துக்கு தடுத்து வைத்தல் அவசியமென பொலீஸ் போக்குவரத்துப் பிரிவினர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மதுபானம் அருந்திய பின்னர் வாகனத்தைச் செலுத்துவது இலேசானதாயிருக்கும் என்றதொரு எண்ணம் வாகனசாரதிகளில் பெரும்பாலோரிடம் காணப்படுவதாக மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அதன்படி மதுபானம் அருந்தியதும் மனிதனின் மூளையின் செயற்பாட்டின் குறிப்பிட்டதொரு மாற்றம் ஏற்படுவதோடு, தீர்மானமொன்றை மேற்கொள்வதில் சிரமமும் ஏற்படுகின்றது. அவ்வாறானதொரு நிலையில் குறிப்பிட்ட வாகனசாரதிக்கு விபத்துச் சம்பவம் தொடர்பாக உணர்ந்துகொள்ள இயலாத நிலையும் தோன்றுவதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

எந்தவொரு வாகன விபத்தின் போதும் ஏற்படும் பாதிப்பின் தன்மை அவ்வாகனம் செலுத்தப்பட்ட வேகத்தின் அடிப்படையிலேயே அமைவதாக ஆய்வாளர்களின் பரிசோதனைகளின மூலம் தெரியவந்துள்ளது. மணித்தியால மொன்றுக்கு 40 முதல் 50 வரையான கிலோமீற்றர் வேகத்தில் செலுத்தப்படும் வாகனமொன்று விபத்தில் சிக்கும்போது ஏற்படும் பாதிப்பின தன்மை, கட்டடமொன்றின் இரண்டாம மாடியில் இருந்து நிலத்தில் விழும் போது ஏற்படும் பாதிப்பை ஒத்திருக்கும். அதேசமயம் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் வாகனம் விபத்தில் சிக்கிக்கொள்ளும் வேளை ஏற்படும் பாதிப்பின் தன்மை, மாடிக் கட்டடமொன்றின் 12ஆம் மாடியிலிருந்து நிலத்தில் வீழ்வதால் ஏற்படும் பாதிப்பின் தன்மையை ஒத்திருக்கும். இதிலிருந்து வாகன விபத்தொன்றின்போது வாகனத்தின் வேகம் மிகமுக்கியத்துவம் பெறுகின்றமை உணர்த்தப்படுகிறது.

ஆனால், ஸ்ரீலங்காவில் இதற்கு முற்றிலும் மாறுபட்டதொரு நிலைமையே காணப்படுகிறது. நமது நாட்டில் வாகனமொன்றை செலுத்திச் செல்லும் சாரதி, வாகனம் செல்லும் பாதையில் செல்லும் ஏனைய வாகனங்கள் குறித்தோ அல்லது அப்பாதையில் பயணம் செய்யும் பொது மக்கள் குறித்தோ எவ்வித கவலையும் கொள்வதில்லை. இந்நிலை பொதுமக்கள் பிரயாணம் செய்யும் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளிடமே பெரிய அளவில் காணப்படுகிறது. இலாபமீட்டும் நோக்கில் செயற்படும் இவர்கள், ஏனைய பயணிகள், வாகனங்கள் தமது வாகனங்களை முந்திச் செல்ல இடமளிக்காது வாகனத்தைச் செலுத்திச் செல்வது மனித உயிருக்கு எவ்வித மதிப்பும் கொடுக்காது செயற்படுவது போன்றமைகிறது. பயணிகள் வாகனத்தைச் செலுத்துவோரில் பலர் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட ஒரு சில நாள்களில் பயணிகள் வாகனத்தைச செலுத்த ஆரம்பித்துவிடுகின்றனர். இப்படியானவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படவேண்டு மென்பது

**விபெஸ்ரி**

நாட்டில் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்புக் கொண்டவர்களின் கருத்தாகும்.

தற்போது தனியார் போக்குவரத்து வாகனச் சங்கங்களும், அவர்களுக்கு ஆதரவளிக்கும் கூட்டத்தினரும் இச்சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டக் கடப்பாடு கொண்ட அதிகாரிகளுடன் சச்சரவுபட ஆரம்பித்துள்ளனர். இதனால் நீதியை நிலைநாட்ட வேண்டிய அதிகாரிகள் சட்டத்தை மீறிச் செயற்படுவோருக்கெதிராக நடவடிக்கையில் ஈடுபடாது வாளாவிருக்கும் நிலை உருவாகிறது. இதனால் சிரமத்துக்குள்ளாவது அப்பாவிப் பொதுமக்களே. ஒரு சிறு பிரிவினரின் அழுத்தம் காரணமாக அப்பாவி பயணிகள் உயிரைப் பலியெடுக்கும் வாகன சாரதிகளின் செயற்பாடுகளுக்கு இடமளிப்பதை அனுமதிக்க முடியாது. இந்நிலையில், கொழும்பு மாநகரத்தில் மட்டும் மாதாந்தம் 900 முதல் ஆயிரம் வரையிலான வாகன விபத்துக்கள் இடம்பெறுவதாக அறிக்கைகள் மூலம தெரியவருகின்றது. அவற்றில் 7 முதல் 10 வரையிலான பொதுமக்கள் உயிரிழக்க நேரிடுகிறது. இவற்றுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளாது தவிர்ப்பது பொதுமக்களுக்குத் துரோகமிழைக்கும் செயலாகும்.

ஸ்ரீலங்காவில் சம்பந்தப்பட்டவர்களின் தராதரத்துக்கு அமையவே அவரவர்கள் தொடர்பான வாகனப் போக்குவரத்து விதிகளை மீறும் குற்றங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. போக்குவரத்துப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த அதிகாரியொருவருக்கு அண்மையில விசித்திரமான அனுபவமொற்றைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவர் சந்தித்த வாகனசாரதி ஒரு கையையே கொண்டிருந்தார். ஆச்சரியத்தோடு அவ்வாகன சாரதியை நோக்கிய அவருக்கு தான் காண்பது கனவா என்ற சந்தேகம் மனதில் உருவாகியது. ஆனால், அது உண்மையில் நிஜமே. உண்மையில் அவ்வாகன சாரதிக்கு ஒரு கையே இருந்தது. அவரது மறுகை ஏதாவதொரு விபத்தின் காரணமாக அகற்றப்பட்டிருக்கலாம். சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள அந்த அதிகாரி தயாரான வேளையில் தனது பிரபல்யத்தையும், அதிகாரத்தையும் காட்டி அவ்வாகன சாரதி அந்த அதிகாரியை மிரட்டியுள்ளார். ஒருவேளை அவ வாகன சாரதியின் செயற்பாட்டால் விபத்து ஏற்பட்டிருக்குமானால், அதனால் பாதிப்பைச் சந்திப்பது அப்பாவிப் பொதுமக்களேயாகும். இவ்வாறான வாகன சாரதிகள் குறித்து கவனமெடுக்கப்படுவது மிக முக்கியமானதாகும். ஸ்ரீலங்காவில் ஏற்படும் வாகன விபத்துக்கள் மற்றும் அவற்றால் ஏற்படும் இழப்புக்கள் குறித்து பலவித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன. இவ்விடயத்தில் வாகனம் செலுத்துவதில் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்களாவது அனுபவம் கொண்ட சாரதிகளை மட்டுமே பயணிகள் வாகனங்களை செலுத்துவதற்கு அனுமதிக்கும் கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்பட வேண்டு மென்ற கருத்தை வாகனங்கள் தொடர்பான ஆலோசனையாளர்கள் முன்வைத்துள்ளனர். வாகன விபத்துக்களின் போது சம்பந்தப்படும் வாகனசாரதிகளின் அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக இரத்துச் செய்யும் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொளளப்படுவதுடன், இவ்வித விபத்துக்களில் சிக்கி காயமடையும் அல்லது மரணமடையும் பொதுமக்கள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்படுவது அவசியமாவதுடன் விசேட காப்புறுதித் திட்டமும் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் அவர்களுக்கு நிவாரணம் வழங்க வழி வகை செய்யப்படுதல் அவசியமாகும். ✳

## மதுபோதையில் மோ.சைக்கிள் செலுத்திய மாணவனுக்கு ரூபா 3 ஆயிரம் தண்டம்

வலி.வடக்கு,நவ.1

மதுபோதையில் மோட்டார்ச் சைக்கிள் செலுத்திய மல்லாகம் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர் ஒருவருக்கு மல்லாகம் நீதிமன்றம் கடுமையான புத்திமதி கூறியதுடன், உரிய ஆவணங்கள் இல்லாமைக்காக 3 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்தது.

கடந்த திங்கட்கிழமை மல்லாகம் சந்தியில் இரவுநேரம் வாகனச சோதனையில் ஈடுபட்டிருந்த தெல்லிப்பழை பொலீஸார் உரிய மோட்டார் சைக்கிளை மறித்துள்ளனர். எனினும், மோட்டார் வாகனச் சாரதி அதனை நிறுத்தாது சென்றுள்ளார்.

இதனை அடுத்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தை வாகனத்தில் கலைத்துச் சென்று உரிய மோட்டார் சைக்கிளை பொலீஸார் பிடித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டார்.

தலைக்கவசம் அணியாமை, காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம இன்றி வாகனம் செலுத்தியமை, பொலீஸார் நிறுத்துமாறு கூறிய போதிலும் நிறுத்தாது வாகனத்தைத் தொடர்ந்தும் செலுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் நீதிமன்றில் இவர் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

குறிப்பிட்ட மாணவனுக்கு நீதிபதியும், நீதிமன்ற முதலியாரும் கடுமையான புத்திமதிகளைக் கூறியதுடன் இது போன்ற சம்பவங்களில் எதிர்காலத்தில் ஈடுபடக்கூடாது என்றும் அறிவுறுத்தினர். (எ-86)

## தொடர்பாடல் தொழில்நுட்ப தேசிய சான்றிதழ் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,நவ.1

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் தில் தேசிய சான்றிதழ் கற்கை நெறிக்கான வகுப்புகளை எதிர் வரும் ஜனவரிமாதம் ஆரம்பிக்க வுள்ளது.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா முதலான மாவட்டங்களில் இப்பயிற்சிநெறி இடம்பெறவுள்ளது.

கணிதம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தி உட்பட ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-12)

**G.C.E. A/L, O/L படித்த பெண்பிள்ளைகள்**
**தாதிப் பயிற்சியில் சேர்க்கப்படுவர்**

விவரம்: **5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில்**
**காலை 9 மணிக்கு நேரில் வரவும்.**

**சம்மந்தர் மொடோன் கிளினிக்**
08, இராமையாச் செட்டியார் வீதி,
(அமுல் கிறீம் கவுஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.
(24245) (25-13-12-21)


## மூன்றாம் ஆண்டு பிரிவுத்துயர் அஞ்சலி



பிறப்பு 11 - 06 - 1929

இறப்பு 01 - 11 - 2000

## பேனாட் யேசுதாசன் அரியரட்ணம்

(முன்னாள் உத்தியோகத்தர், இ.போ. ச.)

நீதி விசாரணைக்கு என்னை
அழைக்காதேயும் ஆண்டவரே!
ஏனெனில் உமது திருமுன் எவனும்
நீதிமானில்லை!

(26-12-21-13)

17/2,சென் ஆன்ஸ் வீதி,
பாண்டியன்தாழ்வு. (24236)

பிரிவின் துயரில் வாடும்:
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேர்த்தி.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 - 09 - 1921

மறைவு 11 - 11 - 2002

## அமரர் கைலாயர் வேலாயுதர்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: 01.11.2003 (ஐப்பசி மாத பூர்வபக்க அட்டமி)

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்**
**அன்பாய், ஆதரவாய், பண்பாய் வாழ்ந்த**
**அன்புக்குரிய தெய்வமே!**

உங்கள் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

(34-21-13-12)

சுமங்கலி,
பருத்தித்துறை வீதி,
வரணி. (24230)

என்றும் உங்கள் நினைவுடன் இருக்கும்:
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 05 - 05 - 1936

இறை அடியில் 11 - 11 - 2002

## அமரர் பெரியான் கனகன் (பொன்னன்)

**புத்தூர் வடக்கு, மருதடி, புத்தூர்.**

ஆண்டுகள் ஒன்று உருண்டு ஓடியும்
உங்கள் அன்பு முகம் எம்மைவிட்டு மறையவில்லை தந்தையே!
தீங்கு எனும் சொல்லைக் கூட விரும்பாத தெய்வமே!
அல்லும் பகலும் மெழுகாய் உருகி எம்மை அரவணைத்த தெய்வமே!
எங்கள் அன்புத் தந்தையே! பூவுலகில்
எங்களை உயர்த்தி வாழவைத்த உத்தமனே!
எம் இதயங்களில் நீங்காத இடம்பிடித்த எங்கள் அன்பு தந்தையே!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

புத்தூர் வடக்கு,
மருதடி (சுன்னாக வீதி). (24255)(35-21-12-13)

**-குடும்பத்தினர்.**

## ஜி.சீ.ஈ.சாதாரண பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.1

டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இன்றும் நாளையும் மானிப்பாய் பரிஷ்லியோ கழகத்தினால் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இக்கருத்தரங்குகள் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கே இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 13ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளில் புங்குடுதீவு மகா வித்தியாலயத்திலும், ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் மகா வித்தியாலயத்திலும் இக்கருத்தரங்குகள் காலை 9 மணிக்கு நடைபெறும்.

(ம-10-152)

## சடலத்தை பொறுப்பேற்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ். ஆஸ்பத்திரியில் 10 ஆம் வார்ட்டில் சிகிச்சை பெற்றுவந்த எஸ். பரமேஸ்வரன் என்பவர் கடந்த 29ஆம் திகதி காலமாகிவிட்டார் என்றும் - சம்பந்தப்பட்டவரின் உறவினர்கள் வைத்தியசாலையில் சமுகமளித்து சடலத்தை பொறுப்பேற்கும்படியும் - வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ழ-3)


## தென்னிலங்கைச் சுற்றுலா

புதிய உயர்கல்லூரி வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம் தென்னிலங்கைச் சுற்றுலா ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது. எமது கல்லூரி B.A. Final, B.A. Pera., B.A. Part I மாணவர்கள் முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக இறுதிப் பதிவினை மேற்கொள்ளவும்.

காலம்: **நவம்பர் 1ஆம், 2 ஆம் திகதிகள்**
நேரம்: **10 - 2 மணி**

- மாணவர் ஒன்றியம்.

புதிய உயர் கல்லூரி,
யாழ்ப்பாணம். (24275) (34-12-21-13)


## அகவை அறுபதில் அகமிக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

01.11.2003



*சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த முன்னாள் ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளரும், ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம், சிவகாமி தொலைத் தொடர்பு நிலையம் என்பவற்றின் உரிமையாளருமாகிய*

### உயர்திரு.சின்னத்தம்பி கந்தசாமி

இன்று **(01.11.2003)** சனிக்கிழமை தமது அறுபதாவது அகவையைக் கொண்டாடும் இவரை இறைவன் அருளால் சீரோடுஞ் சிறப்போடும் பல்லாண்டு காலம் நலமுடன் நீடூழி வாழ வேண்டுமென உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

*பேரப்பிள்ளைகள்:*
விஸ்ணுகா, கம்சிகா, சரணிகா,
ஐங்கரன், தாட்சாயினி ஆகியோருடன்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்.

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி (35-12-13-21)


(24276)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## முதலாவது பிறந்த தின விழா

02.11.2003

HAPPY BIRTHDAY



கோண்டாவில் திரு. யோகேஸ்வரன் - திருமதி விஜிதா
தம்பதியரின் செல்வப்புதல்வன்

### செல்வன் பபிகரன்

தனது முதலாவது பிறந்ததினத்தை நாளை (02.11.2003) ஞாயிற்றுக்கிழமை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, அன்புச் சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர்களுடன் வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையின் அருளாசியுடன் வெகு சிறப்பாகக் கொண்டாடவுள்ளார்.


எமது அன்புச் செல்வத்தின் பிறந்தநாள் விழாவில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வந்து கலந்து சிறப்பித்து பபிகரனை ஆசி கூறி வாழ்த்தியருளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இ.யோகேஸ்வரன்** (அப்பன்),
**இருபாலை வீதி, கோண்டாவில் சந்தி அருகில்**
**கோண்டாவில் கிழக்கு.**
**(நியூ கிருஸ்ணா நகைத் தொழிலகம்)** (24250)

தங்கள் நல்வரவை விரும்பும்:
**திரு.திருமதி யோகேஸ்வரன் - விஜிதா**
**தம்பதியினர்.**
(34-12-13-21)

## நீங்காத நினைவலைகள்

2 ஆம் ஆண்டு



**தோற்றம்:** **13.07.1909**
**மறைவு:** **11.11.2001**

அமரர்
### முருகேசு கணபதிப்பிள்ளை
திதி: 21.10.2003

3 ஆம் ஆண்டு



**தோற்றம்:** **11.10.1917**
**மறைவு:** **04.11.2000**

அமரர்
### சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை
திதி: 01.11.2003

அன்பால் எம்மை அரவணைத்த தெய்வங்களே!
அயராது எம் உயர்வுக்காய் நாளும் உழைத்திட்டீர்!
அவனியிலே எமக்கோர் உறுதுணையாய்த் திகழ்ந்தீரே!
ஆண்டு பல சென்றாலும் ஆறாது உம் நினைவு.

*கணையந்தோட்டம்,*
*புலோலி கிழக்கு, பருத்தித்துறை.* (34-12-13-21)

*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

(C31042) (34)

# "...பொருளாதார அபிவிருத்தியும், சுபீட்சமும் தெற்கில் மட்டும்தான்; வடக்கில் அல்ல..."

14ஆவது செவ்வி

**அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் தமிழர் பகுதியில் போர் நின்றதைத் தவிர வேறு ஏதாவது முன்னேற்றங்கள் இருக்கின்றனவா என்பது பற்றிய அலசல் இந்தப் பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.**

**இதுவரை செவ்வி வழங்கியவர்களின் கருத்துக்களின்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டதன் படியான மக்களின் இயல்பு வாழ்க்கை தமிழர் தாயகப் பகுதியில் ஏற்படவில்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது செவ்விகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.**

**அந்த வகையில், யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும், யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவரும், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளரும், யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான சொலமன் சூ.சிறிலின் செவ்வி இன்று வெளியாகின்றது.**



*கேள்வி:* புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து ஒன்றரை வருடமாகின்றது. மக்களின் இயல்பு வாழ்க்கையில் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டதா?

*பதில்:* தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்ட கொடியபோருக்கு முடிவுகட்டி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஏதுவான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதுதான் இப்போர்நிறுத்த உடன்பாட்டின் பிரதான நோக்கமாகும். போரினால் சிதைந்துபோயிருக்கும் தமிழர் தாயகத்தில் போர் நெருக்கடிகளை முழுமையாகத் தணித்து இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதும், மிகவும் இறுக்கமான இராணுவ ஆட்சியின் கீழ் தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அடக்குமுறைத் தடைகளை நீக்கி அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதும், புரிந்துணர்வு உடன்படிக்கையின் நோக்கமாகும்.

தமிழர் தாயகத்தில் இயல்புநிலையை உருவாக்கும் நோக்குடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்த விதிகளும் நல்லெண்ண நடவடிக்கைகளும் முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை. இதனால், ஏமாற்றமும் கவலையும் அடைகின்றோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஏற்ப காவலரண்களை அகற்றுவதற்குப் பதிலாக, அவற்றைப் பலப்படுத்தி வருகின்றனர் படையினர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி 20 மாதங்கள் கடந்துவிட்டன. ஆறு சுற்றுப்பேச்சுக்கள் பூர்த்தியடைந்துள்ளன. இப்பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் கூட இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதற்குக் காரணம் ஸ்ரீலங்கா அரசின் கையாலாகாத்தனம்தான். இதனால் மக்கள் சமாதானத்தின் மீதுகொண்ட நம்பிக்கை இழந்து வருகின்றது. யுத்தம் நடைபெற்ற காலத்தைப் போன்றே வடக்கு - கிழக்கில் படையினா தற்போதும் விரவி நிற்கின்றார்கள். சில முகாம்கள் இடமாற்றப்பட்டதே தவிர, மக்கள் மத்தியில் ஆயுதப்படையினர் தினமும் ஆயுதங்களுடன் நடமாடுவதில் எதுவித மாற்றங்களும் ஏற்படவில்லை. அதி உயர் பாதுகாப்பு வலயம் என்றும் படைமுகாம்கள் என்றும் மக்கள் குடியிருப்புக்களின் மத்தியில் படையினரின் பிரசன்னம் அதிகரித்துச் செல்கின்றது.

இதனால், இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு மறுக்கப்பட்ட நிலையில், மக்களின் இயல்பு வாழ்க்கை நிலையை உருவாக்க முடியாது. இராணுவச் சூழ்நிலையே தொடர்கின்றது.


இந்நிலையை விடுதலைப் புலிகள் இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துக் கூறியுள்ளனர். ஆனால், முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை.

*கேள்வி:* இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படும்போது, மக்களின் இயல்பு நிலைக்கு தீர்வு காணலாம் எனக் கருதுகிறீர்களா?

*பதில்:* சிங்கள தேசத்தில் சிங்கள மக்கள் எப்படி உரிமையுடனும், கௌரவத்துடனும், மகிழ்ச்சியுடனும், பாதுகாப்புடனும் வாழ்கிறார்களோ, அதேபோன்று எமது தாயக பூமியிலும் தமிழ்மக்கள் வாழ்வதற்கான வழி வகைகளை ஏற்படுத்தவே தமிழரின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளினால் இடைக்கால நிர்வாக யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

காணி, நிதி, சட்டம், கல்வி போன்ற துறைகளை உள்ளடக்கியதாக முழுமையான அதிகாரக் கட்டமைப்பையே வேண்டிநிற்கிறோம். இந்த இடைக்கால நிர்வாகம் மூலம் வடக்கு - கிழக்கு மட்டுமல்ல, தெற்கும் முன்னேற்றம் காணும்.

இன்று நடைமுறையில் உள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் வடக்கு - கிழக்கு மக்களை விட தெற்கு மக்களே கூடுதல் நன்மைகளை அனுபவித்துவருகின்றனர் என்பதை எவராலும் மறுக்கமுடியாது.



**இந்த அழகிய தீவில் நீடித்த, நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும். இங்குள்ள தமிழர்கள், சிங்கள மக்களைப் போன்று அதே சமஅந்தஸ்துடனும் சம வாய்ப்புகளுடனும் சுதந்திரமாக, பாதுகாப்பாக, பொருண்மிய சுபீட்சத்துடனும் வாழ்வதற்கு ஒரே வழி வலுவுள்ள இடைக்கால நிர்வாகம் ஒன்றுதான். இந்த இடைக்கால நிர்வாகம் இதில் எந்த விட்டுக்கொடுப்பிற்கும் வெட்டிப்பேச்சுக்கும் இடமில்லை. இதையே பொது அமைப்புக்களாகிய நாம் வலியுறுத்தி நிற்கின்றோம். இதனால் சிங்கள தேசமும் ஏன் சிங்கள மக்களும் கூட நன்மை அடைவார்கள். இது விடயத்தில் நாம் தேசியத் தலைவருக்கு பெரும் அழுத்தங்களைக் கொடுத்து வருகிறோம்.**

ஆனால், சிங்கள ஆட்சியாளர்களால் கடந்த காலங்களில் காட்டப்பட்டுவரும் வரலாற்றுப் பாரபட்சம் சமாதானச் செயற்பாடுகளிலும் காட்டப்படுகின்றது. இதனால் சமாதான கால நன்மைகள் தமிழ்மக்களைச் சென்றடையவில்லை. ஆனால், தெற்கில் இயல்பு வாழ்க்கையும் பொருளாதார அபிவிருத்தியும் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு செல்கிறது.

*கேள்வி:* பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு பற்றி...?

*பதில்:* ஒரு நாடு, ஒரு தேசம், ஒருமக்கள் என்பது ஆட்சியாளரின் சித்தாந்தமாக இருக்கலாம். ஆனால், எமது நிலைப்பாடு தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பனவாகும்.

தமிழர் ஒரு தனித்துவமான மக்கள் சமூகமாக விளங்குகிறார்கள். அவர்களுக்கு தனித்துவமான மொழி, பண்பாடு, வரலாறு, பொருளாதார வாழ்வு ஆகியன உண்டு. அவர்களுக்கு சொந்தமான பாரம்பரிய நிலம் உண்டு. இதனால் அவர்கள் ஒரு தேசிய இனக்கட்டமைப்பைக் கொண்ட மக்களாக விளங்குகிறார்கள். எனவே, எமது மக்கள் தமது தேசிய அடையாளத்தைப் பேணிப் பாதுகாக்க விரும்புவது, ஒரு நியாயபூர்வமான, சட்டரீதியான கோரிக்கையாகும்.

*கேள்வி:* பேச்சுக்கு அல்லது பாதுகாப்பு வலய விடயத்துக்கு புலிகள் ஆயுதங்களை கையளிக்கவேண்டும் என நிபந்தனை விதிப்பது குறித்து...?

பதில்: உலகில் மிக மோசமான வகையில் உள்நாட்டுப் போர் நடந்த நாடுகளில் நிரந்தர தீர்வு எட்டப் படும்வரை ஆயுதக்கையளிப்பு இடம் பெறவில்லை. சாதாரண கெரில்லா இயக்கமாக உருவாகி, இலங்கையில் இரு இராணுவங்கள் உள்ளன என்பதை சர்வதேச சமூகம் ஏற்கும் அளவுக்கு விடுதலைப் புலிகள் வளர்ந்துள்ளனர். மரபுவழிப் படையணியாக புலிகள் மாறியுள்ள நிலையில், பேச்சுக்கு முன்னர் அல்லது பாதுகாப்பு வலயங்களில் இருந்து படையினரை நகர்த்துவதற்கு முன்னர் ஆயுதங்களை கைவிடுமாறு கோருவது நகைப்புக்குரியது; நடைமுறைச் சாத்திய மற்ற விடயமுமாகும்.

*கேள்வி:* அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இந்திய இராணுவ நிபுணர் ஜெனரல் சதீஸ் நம்பியார் ஆராய்வது குறித்துக் கூறமுடியுமா?

பதில்: சதீஸ் நம்பியார் யாழ்ப்பாணம் வந்த சமயம் அவருடன் கலந்துரையாடினேன். சமாதான முயற்சிகளுக்கு பலவழிகளிலும் முட்டுக்கட்டை போட்டுவரும் இந்தியா, நம்பியார் என்பவரின் ரூபத்தில் பாதுகாப்பு வலய விடயத்தில் தலையிட்டுள்ளது. அவரும் தனது செயற்பாடுகளை சமாதான முயற்சிகளை குழப்பும் வகையில் முன்னெடுத்தார். அவருடன் கலந்துரையாடிய சமயம் இதை உணர்ந்தோம்.

*கேள்வி:* முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கு எந்தவகையில் தீர்வைக் காணவேண்டும் என்று கருதுகிறீர்கள்?

*பதில்:* தமிழர் தாயகம் என்பது தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற தமிழ் பேசும் மக்கள் ஒன்றாக வாழ்ந்த - நன்றாக உழைத்த - நிலப்பரப்புத்தான் வடக்கு - கிழக்குப் பிரதேசம். இந்த நிலம் முஸ்லிம் மக்களுக்கும் உரித்தானது. கடந்த வருடம் எமது தலைவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும்போது முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படவேண்டியது அவசியமாகும்.

*கேள்வி:* சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்க முன்னெடுக்கவேண்டிய செயற்பாடுகள் என்ன?

*பதில்:* சமாதானப் பேச்சுக்கள் சீராக முன்னெடுக்கப்படவேண்டுமானால் கழ்க்காணும் நடைமுறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

போர்நிறுத்த உடன்பாட்டின்படி இராணுவம் புனித தலங்கள், பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள் ஆகியவற்றில் இருந்து முற்றாக வெளியேறவேண்டும்.

**செவ்விகண்டவர் : குகா**

பொதுமக்கள் செறிந்து வாழும் கிராமங்கள், பட்டினங்கள், நகரங்களில் இருந்து காவலரண்கள், சாவடிகள் உடன் அகற்றப்படவேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் உள்ள 13வலயங்களும் அகற்றப்படவேண்டும். அதன்மூலம் மக்கள் மீளக்குடியமரவும் விவசாய, மீன்பிடித் தொழில்களை சுதந்திரமாக மேற்கொள்ளவும் வசதி செய்யப்படவேண்டும்.

ஏற்கனவே அரசு வாக்குறுதி அளித்தபடி இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் கையளிக்கவேண்டும்.

*கேள்வி:* கூட்டுறவாளர் என்ற வகையில் கூட்டுறவுத்துறை வளர்ச்சி பற்றிக்கூறுவீர்களா?

*பதில்:* கூட்டுறவு என்பது பாரிய ஆலமர விருட்சம். அவற்றில் பல கிளைகள் உள்ளன. அவை மக்களின் சமூக, பொருளாதார, கலை, கலாசார, கல்வி ஆகிய துறைசார்ந்த பணிகளுக்காக அன்றும் இன்றும் என்றும் பணியாற்றி வருகின்றன. ஆனால், ஸ்ரீலங்காவில் காலத்துக்குக் காலம் ஏற்படுகின்ற அரசியல் மாற்றங்களின் காரணிகளால் கூட்டுறவில் பல மாற்றங்கள், பின்னடைவுகள் ஏற்பட்டாலும் கூட்டுறவு மக்கள் பணியில் என்றும் பின்னின்றதில்லை.

குறிப்பாக வடக்கு - கிழக்கு கூட்டுறவுக்கு முன்னோடியாகவும் முன்னுதாரணமாகவும் திகழ்ந்தது. போரினாலும் பொருண்மிய தடைகளினாலும் போக்குவரத்துத் தடைகளினாலும் பல இழப்புக்களை சந்தித்து நிற்கின்றது.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் 24இற்கும் மேற்பட்ட சங்கங்கள் யுத்தத்தினால் கிட்டத்தட்ட 58கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை இழந்து நிற்கின்றன. இந்த இழப்புக்கு ஏற்ப நஷ்டஈட்டை இதுவரை அரசு வழங்கவில்லை.

இருந்தபோதும் இன்றைய சிறந்த பொருளாதாரம் சிறந்த சந்தை வாய்ப்புகளுக்கு ஈடு கொடுத்து சுயசார்புடைய, தன்நிறைவான வளங்களுடன் அந்தச் சங்கங்கள் நிமிர்ந்து நிற்கின்றன. ★

# சிஹல உறுமயவை தடை செய்யும்படி மலையக மக்கள் முன்னணி கோரிக்கை

கொழும்பு,நவ.1

பயங்கரவாத இயக்கமான சிஹல உறுமய கட்சியை உடன் தடை செய்யவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் எம்.பியான வெ.இராதாகிருஷ்ணன் கோரியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிஹல உறுமயவினர் மற்றும் ஒரு சில பேரினவாதிகள் இணைந்து மேற்கொண்டுவரும் தரம்கெட்ட ஒரு சில காரியங்களால் இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் பெரும் வேதனைப் படுவதோடு, ஆத்திரமும் அடைந்துள்ளார்கள்.

அரசியல் ரீதியாக செல்வாக்கை இழந்துள்ள சிஹல உறுமய கட்சியினர் இன்று அரசியல் சுயலாபம் தேடுவதற்காக இந்நாட்டில் வாழும் அனைத்து தமிழர்களையும் - குறிப்பாக கலைஞர்கள், தமிழ் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் என அனைவரையும் தமிழ் பயங்கரவாதிகளாக சித்திரிக்கின்றனர். அண்மையில் இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கலை நிகழ்ச்சியை 'பொங்கு தமிழ்' நிகழ்வு என வர்ணித்து அவர்கள் தடைசெய்யப் பார்த்தார்கள். அது கைகூடாமல் போனது. இன்று சிங்கள - தமிழ் கலைஞர்கள் ஒன்று கூடி நடத்திய கலை நிகழ்வை 'பொங்கு தமிழ்' எனச் சொல்லி குழப்பியடித்துள்ளார்கள். இது இப்படியே தொடருமானால் நாளை தமிழர்கள் கொழும்பில் எந்தவிதமான நிகழ்வையும் நடத்த முடியாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவது இவர்களது குறிக்கோளாகும்.

கடந்த வாரம் - தீபாவளி தினத்தன்று - பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்ப்பு பேரணியை நடத்தி தமிழ் மக்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொண்டது. தமிழ் மக்களின் சர்வசாதாரண உணர்வுகளைக் கூட மதிக்கத் தெரியாத இவர்கள் எப்படி தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கப்போகின்றார்கள்?

இப்படியான பேரினவாதிகளின் செயல்களினால் பயங்கரவாதத்துடன் சம்பந்தமில்லாதவர்களும் பயங்கரவாதத்திற்கு தள்ளப்படுவார்கள். இவ்வாறு தமிழர்களுக்கு எதிராக செயலபடும் அமைப்புகள் மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுடன சிஹல உறுமய கட்சி பயங்கரவாத கட்சி என தடை செய்யப்படவும வேண்டும். இன்றேல் இந்நாட்டில் வடக்கு - கிழக்கு மட்டுமல்லாது எல்லா பகுதிகளிலும் அமைதியின்மையேற்படும்.

தமிழ்மக்கள் குறிப்பாக தமிழ் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து பேரினவாதிகளுக்கு எதிராக அணி திரளவேண்டும்.

மலையக மக்கள் முன்னணி அதற்கு பரிபூரண ஆதரவு வழங்கும் - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## அனலைதீவில் விவசாய உள்ளீடுகள் விநியோகம்

நெடுந்தீவு,நவ.1

அனலைதீவைச் சேர்ந்த விவசாயிகள் காலபோகத்திற்கான விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதைத் தொடர்ந்து, அவர்களின் நலன்கருதி அனலைதீவு பல நோ.கூ.சங்கம் விவசாய உள்ளீடுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் வ.கனகசபை தெரிவித்தார். (எ-11)

## 'சிசு உதான' பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.1

'சிசு உதான' பொது அறிவுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது என்று யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள தமிழ தட்டச்சு இயந்திரம் விற்பனைக் குண்டு. (Godrej Model Standard Machine) தொடர்பு: மு.தியாகராசா (மொழி பெயர்ப்பாளர்), பிரதான வீதி, சங்கானை. (24129)

இசுசு கூலர் 10½ அடி நீளம், 10மாதங்கள் விநியோகப் பாவனையி லுள்ள GY தொடர் இலக்கங் கொண்ட மிகவும் நல்ல நிலையிலுள்ள வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: நில்கந்தா, யாழ்.வீதி, மானிப்பாய் (மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்). (24281)

## வீடு விற்பனைக்கு

இல.34, புங்கன்குளம் வீதி, ஈச்ச மோட்டை சந்தியில் 12 பரப்புக்காணி யுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. (வீடு, காணி பிரித்தும் கொடுக்கப்படும்) தொடர்பு: திருமதி வி.சிவகுருநாதன், C/o திரு. க.ஞானகணேசன், 7 ஆம் கட்டை, சங்கானை. (24202)

## வீடற்றவன் நாவல்

விளக்கமும் விமர்சனமும் எழுதி யிருக்கிறார். எல்லாவகை இலக்கியங் களும் படைத்த கலாபூஷணம் அராலி யூர் ந.சுந்தரம்பிள்ளை. O/L மாண வர்கள் விருப்பப்பாடமான தமிழ் இலக்கியம். படிக்கச் சிறந்த நூல் ரூபா 25/=. (24249)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர்கள் விற்பனைக்குண்டு. வேண்டிய நிறைகளில் இலவசமாகச் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். விலை தேறிய நிறை 220/= மட் டுமே. தொடர்பு: S.குமரன், 227, பிற வுண் வீதி (நரியன் குன்றுக்கு அரு கில்), யாழ்ப்பாணம். (24029)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima Broiler இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (24284)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ் சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் குறைந்த விலையில் 10.11.2003 பிற்பகல் விநியோகிக்கப் படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் பெற் றுக் கொள்ளலாம். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (24287)

6 நாள் நிரம்பிய தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். (நல்லூர் வீடியோ சென் ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை. முத்திரைச் சந்தையடி, நல்லூர். (24285)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

சுத்தமான Great Dane பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (24286)

## தவறிவிட்டது

சில்லாலை, பண்டத்தரிப்பைச் சேர்ந்த இரத்தினம் இந்திரகுமார் என்ப வருடைய தேசிய அடையாள அட்டை (இல.743134303V), கிளிநொச்சி உதயநகர் மேற்கு, சிவலிங்கம் இந்து மதி என்பவருடைய தேசிய அடை யாள அட்டை, பயண அனுமதிச் சீட்டை என்பன முகமாலை சோதனைச சாவடியில் தவறிவிட்டன. கண்டெடுத்த தவர்கள் இல.10, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள மிலேனி யம் பெஷன் பணியாளர் டினோ விடம் ஒப்படைத்துதவவும். T.P 0777 311486. (24282)

## மணமகன் தேவை

வடமராட்சியைச் சேர்ந்த கௌரவ குடும்பத்தில் 1972இல் பிறந்த, மகம் 4ஆம் பாதம், கிரகபாவம் 20கொண்ட அழகிய, சிவந்த ஒரே மகளுக்கு அரச தொழில் அல்லது சொந்தத் தொழில் புரியும் மணமகன் தேவை. தொடர்பு: T.P.: 226 3907. (24290)

# தீவகப் பகுதி விவசாயிகளுக்கு கட்டாக்காலிகளால் தொல்லை

வலி.வடக்கு, நவ.1

கட்டாக்காலிக் கால்நடைகளின் தொல்லையால் தீவகப் பகுதியில் பல விவசாய நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட முடியா துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தீவகத்தில் கால்நடைகளை வளர்ப் போர் பலர் அவற்றை வீடுகளில் கட்டி வளர்க்காது வெளியே உலாவவிடுவது வழக்கமாகவுள்ளது. ஆனால், பயிர்ச் செய்கைக் காலத்திலும்கூட தமது கால்நடைகளை வீடுகளில் கட்டி வளர்க்க முற்படாது, வெளியே உலாவ விடுவதனால் அவை பயிர்களை நாசம் செய்வதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்தி பயிர்ச் செய்கைக்கு உதவ வேண்டிய அலுவலர்கள் இந்த விடயத்தில் அதிக அக்கறை காட்டு வதில்லை என்று கூறப்படுகிறது.

இதனையடுத்து கட்டாக்காலி கால் நடைகளைத் தீவகத்தில் கட்டுப் படுத்த உரிய நடவடிக்கையெடுக்க வேண்டுமென தேசிய எழுச்சிப் பேரவை பேராளர் மாநாட்டில் வேண் டப்பட்டுள்ளது.

(ஒ-86)

## யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

### வெள்ளிவிழா வருடம்

(2004-01-01 - 2004-12-31)

எமது பாடசாலையின் வளர்ச்சியை கருத்திற்கொண்டு இப்பாட சாலையில் கல்விகற்று வெளியேறிய அனைத்துப் பழைய மாணவர் களையும் நேரிலோ/ கடிதமூலமோ 2003-11-30ஆந் திகதிக்கு முன பாடசாலை நாள்களில் பிற்பகல் 1.30-3.30 வரை தலைவருடன் தொடர்பு கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/யாழ்.இந்து மகளிர்
ஆரம்ப பாடசாலை.

(C/31055) (34-12-13-21)

## விற்பனைப் பிரதிநிதி தேவை

பிரபல தனியார் நிறுவனத்திற்கு. மருந்துப் பொருளகள் அல்லது ஏனைய பாவனைப் பொருளகள் விற்பனைக்கு அனுபவமும் ஆற்றலும் உள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை.

விண்ணப்பதாரிக்கு சிங்கள. ஆங்கில அறிவு மேலதிக தகைமை யாகக் கொள்ளப்படும்.

கல்வித் தகைமை க.பொ.த உயர்தரம்.

விண்ணப்ப முடிவு திகதி: 06.11.2003

விளம்பர இல. 2085,
C/O உதயன், யாழ்ப்பாணம்.

(24288) (34-12-13-21)

## பாராட்டுதல்



வெள்ளாம்போக்கட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தா

### திரு.இராமு கந்தையா

அவர்கள் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டு நேற்று (31.10.2003) வெள்ளிக்கிழமை மேலதிக நீதி வான் எஸ்.நந்தசேகரன் முன்னிலை யில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிர மாணம் செய்துகொண்டார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் D.A.M. பட்டதாரியுமாகிய இவர் 30 ஆண்டுகள் அரசாங்க ஆயுர்வேத வைத்தியராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர். தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்கத்தின் கௌரவ செயலாளர், பல ஆண்டுகாலமாக வெள்ளாம்போக்கட்டி சனசமூக நிலையத்தின் செய லாளர், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உப தலைவர், தென்மராட்சி சனசமூக நிலையங்களின் சமாசத்தின் உப தலைவர் ஆகிய பதவி களை வகித்து வருகின்றார். அன்னாரை மனமாரப் பாராட்டி வாழ்த்து கின்றோம்.

கிராம உத்தியோகத்தர்,
சனசமூக நிலைய நிர்வாகம்,
வெள்ளாம்போக்கட்டி மக்கள்.

(24283) (21-12-13-25)

## 4ஆம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 1931 - 07 - 02



மறைவு 1999 - 11 - 01

### அமரர் நீக்கிலாஸ் செபமாலை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சேவையின் நாயகனே ஆசிரிய வித்தகனே - உங்கள் ஆன்மா மீட்படைய ஆசிக்கின்றேன் ஆண்டவனை.

எதிர்வரும் (3.11.2003) திங்கட்கிழமை அன்னாரின் ஆன்ம இளைப் பாற்றிக்காக உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
செ.ஞானப்பு, (மனைவி)

(24279)(35-12-13-21)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் தலைவரும், எமது பூநகரி பல நோ.கூ. சங்கத் தலைவரும்,யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவருமான

### திரு. காசிநாதர் கார்த்திகேசு

அவர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட சமாதான நீதி வானாக நியமனம் பெற்றமையையிட்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பல நோ.கூ.சங்கம்,
பூநகரி.

(24296) (34-12-13-21)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நெடுந்தீவு மத்தியைச் சேர்ந்தவரும் கரைச்சிதெற்கு பல நோ.கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான

### திரு.வைத்திலிங்கம் குகராசா

அவர்கள் 30.10.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையை முன்னிட்டு அவரை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவு பிரிவு,
நெடுந்தீவு மக்கள்.

நெடுந்தீவு.

(25-12-13-21) (சி-31054)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன்
திருவருட்செல்வன்
அவர்களின் அன்புத் தந்தையாரும்
கோண்டாவில் கிழக்கு இராசமணி
களஞ்சிய உரிமையாளருமான

### நல்லையா தளையசிங்கம்

அவர்களின் மறைவு எமக்கு மிகுந்த மனவேதனையைத தருகிறது. அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்

- மரியதாஸ் பிறிட்மன்
விற்பனைப் பிரதிநிதி
டெல்மேஜ் டி.பி.எல்.

(24291)(32-21-13-12)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜானகி அமிர்தலிங்கம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் தற்பொழுது லண்டனில் வசித்தவருமாகிய தனமணி என செல்லமாக அழைக்கப்படும் திருமதி ஜானகி அமிர்தலிங்கம் 27.10.2003 திங்கட் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் இளைப்பாறிய இந்தியன் ஒவசிஸ் வங்கி அலுவலர் அமிர் தலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-செல்லம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற ராஜரட்ணத்தின் அருமைச் சகோதரியும், லண்டன் கேசவன், வாசுகி, ராகவன், தேவகி, கனடா சத்தியா ஆகியோரின் அன்புத் தாயாரும் லண்டன் வனஜா, ரஜிந்திரன், வசந்தி, முரளிதரன், கனடா ஜெயசோதி ஆகியோரின் மாமியாரும் லண்டனில் வசிக்கும் சகானா, கீர்த்தனா, திவ்வியா, அர்ச்சனா, துளசி, சிறீநாத் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 03.11.2003 திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*60,Nortolk Avenue,*
*Slough SLI 3AD,*
*U.K. T.P.: 01753 553910*

தகவல்:
பிள்ளைகள்.

(24277) (35-12-21-13)

## ஞானமுத்து ஜோசப் செல்வசாமி

பண்டத்தரிப்பை வசிப்பிடமாகக் கொண்ட ஞானமுத்து ஜோசப் செல்வசாமி 30.10.2003 வியாழக்கிழமை இரவு கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிறேஸ் அமுதராணியின் அன்புக் கணவரும் நோயல், Dr.அனுசியா, அஜித்தா ஆகியோரின் பாசமுள்ள தகப்பனாரும் புனிதா, கிளரென்ஸ், வண.சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹெலன், ஜோயல், ஹனன், அலன், ஆன் ஆகியோரின் பாசமுள்ள பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01-11-2003) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு "குருமனை" தென்னிந்திய திருச்சபை அள வெட்டியில் நடைபெற்று, பூதவுடல் பண்டத்தரிப்பு தென்னிந்தியத் திருச் சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"குருமனை"*
*தென்னிந்தியத் திருச்சபை*
*அளவெட்டி.*

தகவல்:
வண.A.K.சுரேந்திரன்
(மருமகன்)

(24273)(32-12-21-13)



கம்யூனிஸ்ட் நாடான சீனாவில் இம்மாதம் முதன்முறையாக உலக அழகிப் போட்டி நடைபெற உள்ளது. இதையொட்டி பெய்ஜிங்கில் நடைபெற்ற விழாவில் உலக அழகியான அஸ்ரா அக்கின் கலந்துகொண்டு பேசினார்.

# பெண் சிசுக் கொலை அதிகரிப்பு

இந்தியாவில் பெண் குழந்தை விகிதம் குறைந்து வருவது குறித்து ஐநா. சபை அதிர்ச்சி வெளியிட்டுள்ளது.

இது குறித்து ஐநா. மக்கள்தொகை நிதியம் வெளியிட்ட ஓர் ஆய்வு அறிக்கை ஏடு இதைத் தெரிவிக்கிறது.

அநத ஆய்வேடு இந்தியாவின் பல பகுதிகளில் ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு 800 பெண் குழந்தைகளே இருக்கின்றனர் என்கிறது.

பெண் சிசுக்கொலை, கருவிலேயே பெண் குழந்தையை அழித்து விடுதல் ஆகிய கொடுமைகள் குறித்து ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

பெண் சிசுக்கொலை முதலிய சம்பவங்கள் தேசிய சட்டங்களை மீறும் செயலாகும் என்று ஐ.நா. மக்கள் தொகை நிதியத்தின் செயல் இயக்குநர் தோரையா அகமது தெரிவித்தார்.

ஆண்பெண் விகித இடைவெளி அதிகரித்து வருவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பெண் குழந்தைகளைக் கருவிலேயே அழித்து விடுவதும், பெண் குழந்தை பிறந்தால், அதைக் குடும்பத்தினரே கொன்று விடுவதுமே இத்தகைய நிலைமைக்கு வழிவகுத்துள்ளது.

# திபெத் பீடபூமியில் கற்கால மனிதர்கள்

திபெத்தில் பூமியில் இருந்து 4,ஆயிரத்து 234 மீற்றர்கள் உயரத்தில் கற்கால மனிதர் வாழ்ந்ததற்கான அடையாளங்களை சீன தொல்லியல்துறை கண்டுபிடித்துள்ளது.

இது யாங்பஜைன் மாகாணத்து க்கு வடக்கே 3 கி.மீ. தூரத்தில் உள்ள டாம்சங் மாகாணத்தில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கற்களால் செய்யப்பட்ட பொருள்கள், மடபாண்டங்கள் காணப்பட்டதாக திபெத் அருங்காட்சியக ஆராய்ச்சியாளர் கெங்டன் கூறினார்.

மக்கிக் கரியான மரத்துண்டுகள், விலங்குகளின் எலும்புகளும் அங்கு இருந்தன. ஆனால், வீடுகள் இருந்ததற்கான அடையாளங்கள் தென்படவில்லை. எனவே, இப்பகுதிக்கு பழங்குடியினர் அவ்வப்போது வந்து தங்கிச் சென்றிருக்கலாம் என அவர் கூறினார்.

4,ஆயிரம் முதல் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கற்கால மனிதர்கள் வாழ்ந்த 16 இடங்கள் திபெத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

# அன்பிற்கு உண்டோ அடைக்கும் தாழ்?



பாகிஸ்தானிலிருந்து லாகூர் - டில்லி பஸ் மூலம் இந்தியாவுக்கு வந்த தனது காதலி தாஹிராவை, வாகா எல்லையில் வரவேற்றார் அவரது இந்தியக் காதலன்.

இந்தியாவைச் சேர்ந்த தனது காதலன் மக்பூல் அகமதுவின் (வயது30) கைப்பிடிக்க, வாகா எல்லையைத் தாண்டி வந்துள்ளார். பாகிஸ்தானைச் சேர்ந்த காதலி ஜாஹிரா ஜாஹீர் (வயது 20). பல ஆண்டுகள் தடங்கலுக்குப் பின், லாகூரிலிருந்து பஸ் மூலம் வந்த அவரை வாகா எல்லையில் வரவேற்றார் அவரது வருங்காலக் கணவரான மக்பூல். அவர் பஞ்சாப்பில் பத்திரிகையாளராகப் பணியாற்றுகிறார்; தாஹிராவின் உறவினர். அவர் களுக்கு இடையே பல ஆண்டுகளுக்கு முன்னரே காதல் மலர்ந்தது. 2001, டிசெம்பரில் அவர்களது திருமணத்தை நடத்த இரு குடும்பத்தினரும் முடிவு செய்திருந்தனர்.

அப்போதுதான் இந்திய நாடாளுமன்றத்தின் மீது பாக். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அதையடுத்து, டில்லி லாகூர் பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. ரயில், விமானப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டன. அதனால்,இரு குடும்பத்தினரும் சந்திக்க முடியாமல் போய்விட்டது. இப்போது பாகிஸ்தானுடன் சுமுக உறவை ஏற்படுத்த பல நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருகிறது. மீண்டும் பஸ் போக்குவரத்து தொடங்கி விட்டது.

ஆனாலும், இந்தியாவுக்கு வர தாஹிராவுக்கு விஸா கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. உடனே முன்னாள் இந்தியப் பிரதமர் குஜ்ராலை அணுகி, தாஹிராவுக்கு விஸா கிடைக்க உதவுமாறு வேண்டினார் மக்பூல். அவரது முயற்சியால் விஸா கிடைத்தது. இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார் தாஹிரா. எனினும் அவரது பெற்றோருக்கு விஸா கிடைக்கவில்லை. மக்பூல்-தாஹிரா திருமணம் எதிர்வரும் 6ஆம் திகதி பஞ்சாப்பின் குருதாஸ்பூரில் நடக்கவிருக்கிறது.

# அக்கரைச் சீமையிலே...

# ரசிகர்கள் அன்புத் தொல்லை; நடிகர் தனுஷ் கை முறிந்தது



தாய் - தந்தையுடன் தனுஷ்

மருத்துவமனையில் தனுஷ். உடன் தந்தை கஸ்தூரி ராஜா,தாய் விஜயலட்சுமி.

ரசிகர்கள் கூட்டத்தால் ஏற்பட்ட நெருக்கடியில் சிக்கி கீழே விழுந்த நடிகர் தனுஷின் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

இயக்குநரும் தயாரிப்பாளருமான கஸ்தூரிராஜாவின் மகன் தனுஷ். இவர் நடித்த 'துள்ளுவதோ இளமை' 'காதல் கொண்டேன்' 'திருடா திருடி' ஆகிய படங்கள் 'ஹிட்' ஆனதால் தற்போது இளைஞர்களிடையே அவருக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

இந்நிலையில் படப்பிடிப்பு ஒன்றுக்காக வெளிநாடு சென்றிருந்த தனுஷ், சென்னை திரும்பினார். தியாகராஜ நகர், ராஜமன்னார் தெருவில் உள்ள தனது அலுவலகத்துக்கு அவர் வந்தபோது, அவரைக் காண ரசிகர்கள் திரண்டிருந்தனர். அவர்களிடம் பேசுவதற்காக தனுஷ் சென்றார். உற்சாகமடைந்த ரசிகர்கள் முண்டியடித்துக் கொண்டு அவரை நெருங்கினர்.

ஆர்வமிகுதியால் சில ரசிகர்கள் தனுஷைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டனர். அப்போது அங்கே நெருக்கடி ஏற்பட்டது. இதில் நிலை தடுமாறிய தனுஷ் கீழே விழுந்தார். இதனால், இடதுகையில் லேசான எலும்பு முறிவு ஏற்பட்டது.



ரஷியாவில் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிலுள்ள அன்னா அஹ்மதோவா அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ள வயரினால் உருவாக்கப்பட்ட நவீன பாணியில் அமைந்த கர்ப்பிணியின் உருவம்.


**தொகுப்பு : மதுமதி**


துருக்கி நாட்டில் 80 ஆவது குடியரசுதினம் சமீபத்தில் கொண்டாடப்பட்டபோது இஸ்தான்புல் நகரின் மத்திய பகுதியில் தக்ஸிம் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான துருக்கியர்கள் ஏந்திவந்த உலகின் மிக நீளமான தேசியக் கொடி. 3.6 கிமீற்றர் நீளமுடைய இக்கொடி, கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறவுள்ளதாக துருக்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.





அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தின் மாரிகோபா என்ற ஊரின் பெண் சிறைக்கைதிகள் இவர்கள். ஊரில் குப்பைகளை அகற்றுதல், களை பறித்தல், இறந்த சடலங்களைப் புதைத்தல் ஆகிய பணிகளைத் தாங்களாகவே முன்வந்து இவர்கள் தொடர்ந்து 30 நாள்களுக்குச் செய்தால், சிறையிலிருந்து விடுதலை செய்யப்படுகிறார்கள். அப்படி வெளியே வேலைக்குச் செல்லும் போது அனைவரையும் ஒரே சங்கிலியால் பிணைத்து அழைத்துச் செல்கிறார்கள். வேலை செய்ய விருப்பம் இல்லாதவர்கள் தண்டனைக் காலம் முடியும் வரையில் சிறையிலேயே இருக்கலாம்.





பொலிவியா நாட்டின் பஸ் அதிபர் சிகிவேரா. இவர் தனது பஸ் கண்ணாடிகளில் தீவிரவாதி பின்லேடன் படத்தையும் உலக வர்த்தக மைய கட்டடத்தையும் வரைந்து வைத்திருக்கிறார். இத்தனைக்கும் அவர் பின்லேடன் ஆதரவாளரும் இல்லை. பிறகு ஏன் இப்படி செய்கிறார்? இப்படி செய்வதால் அந்த பஸ் டிரைவர் கவனமாக பஸ்சை ஓட்டுவாராம்.எதிரே வரும் வாகனங்கள் கூட இந்த பஸ்சை கண்டு சற்று ஒதுங்கி செல்கிறதாம். இதனால் விபத்து ஏற்படுவது தவிர்க்கப்படும் என்கிறார் அந்த பஸ் அதிபர். பயணிகளும் இந்த பஸ்சில் விரும்பி பயணம் செய்கிறார்கள்.சில பயணிகள் இந்த பஸ் அருகே நின்று"போட்டோ" கூட எடுத்துக்கொள்கிறார்கள். பேசாமல் பின்லேடனை பஸ் ஓட்டச் சொன்னால் சாலை விபத்துக்கள் நடக்கவே நடக்காது.

இஸ்ரேலில் நெகேவ் பாலைவனத்தில் உள்ள கிபுட்ஸ் லாஹாவ் பகுதியில் மறைத்து வைக்கப்படும் வெடிபொருள்களைக் கண்டுபிடிக்கும் பயிற்சியை பன்றிக்கு அளிக்கிறார் கேவா ஷியான். பலஸ்தீனத் தீவிரவாதிகளின் தாக்குதல் நடவடிக்கைகளை முன்கூட்டியே கண்டு பிடிப்பதற்குப் பன்றிகள் பேருதவியாக இருக்கும் என அவர் நம்புகிறார். புதைத்து வைக்கப்பட்டுள்ள வெடிபொருள்களைக் கண்டுபிடித்ததும் வானத்தை நோக்கி தலையை உயர்த்தியபடி அதன் அருகே அமர்ந்து கொள்கின்றன இப்பன்றிகள்.

# ஆளுங்கட்சியையும் எதிரணியையும் இணைத்து நிரந்தர தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி உதவவேண்டும்

## கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி கடிதம்

**தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ. ஆனந்தசங்கரி, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு நேற்று அனுப்பிய கடிதம் இங்கு பிரசுரமாகின்றது.**

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம புதிய அரசு அமைக்கப்பட்டதன் பின முதல் தடவையாக இத்தீவில் வாழும சாதி, சமய, இன மற்றும் பெரியவர், சிறியவர் என்ற பேதமின்றி சகல மக்களுக்கும் முக்கியமெனக் கருதப்படும ஒரு விடயம்பற்றி மிக்க பொறுப்புணர்வுடன் இக்கடிதத்தை எழுத முயற்சிக்கிறேன். 1970ஆம் ஆண்டுக்கு முன்பு நாடாளுமன்றம் வந்த மூவரைத்தவிர மிக முதிய உறுப்பினர்கள் எனக் கருதப்படும் சிலரில் நானும் ஒருவன். 2 ஆவது உலக மகாயுத்தம் முடிந்ததன பின் நடைபெற்ற பல சம்பவங்களைப் பற்றி மிகவும் அக்கறையுடன் கண்டும், கேட்டும், சிலவற்றில் பங்கு பற்றியும் இருக்கின்றேன்.

தங்களின் தந்தையார் சுதந்திரத்திற்கு முன் உள்ளூராட்சி அமைச்சராக மந்திரிசபையில் அங்கம்வகித்தமை, 1947இல் நடந்த முதல் நாடாளுமன்றத் தேர்தல், இந்தியாவும் எமது நாடும் சுதந்திரம் அடைந்தமை, மகாத்மா காந்தியின் படுகொலை, பிரஜாவுரிமைச் சட்டம், 1952 இல் இடம்பெற்ற மகாராணியின் விஜயம், கொழும்புத் திட்ட மாநாடு, ஜவஹர்லால் நேருவின் விஜயம், தங்களின் தந்தையார் எதிர்க்கட்சிக்கு மாறியமை. அவரால் உருவாகப்பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, 1953இல் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட பூரண ஹர்த்தால், தங்கள் தந்தையாரின் பிரதம அமைச்சர் பதவியேற்பு, தனிச்சிங்களச் சட்டம், காலிமுகத் திடலில் நடைபெற்ற தமிழரசுக கட்சியின் சத்தியாக்கிரகம், பண்டா - செல்வா உடன்படிக்கை, பிரசித்தி பெற்ற கண்டியாத்திரை, இம்புல்கொடையில் அந்த யாத்திரை எஸ்.டி.பண்டாரநாயக்காவினால் தடைசெய்யப்பட்டமை, பண்டா - செல்வா ஒப்பந்தம் ரத்தாகியமை, தங்களின் தந்தையாருடைய கொலை, தங்களின் தாயார் உலகிலேயே முதற்பெண் பிரதமராகும் வகையில் இந்நாட்டின் பிரதமராக துடன் சென்றநராகவும் பதவியேற்றமை, நாடளாவிய ரீதியில் நடைபெற்ற இளைஞர் கலவரங்கள், 1971 இல் ஜே.வி.பியினரால் மேற்கொள்ளப்பட்ட முதற் புரட்சி, 1972இல் குடியரசாக பிரகடனப்படுத்திய அரசியல் சாசனம், ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் பிரதமராகப பதவியேற்றபின் அரசமைப்பை மாற்றி முதற்றடவையாக ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்தமை, அ.அமிர்தலிங்கம் அவர்கள் முதல் தமிழ் எதிர்க கட்சித் தலைவரானமை, புதிய கோட்டை நாடாளுமன்ற அங்குரார்ப்பணம். தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் 17 பேர் பொதுசன வாக்கெடுப்பின் மூலம் நாடாளுமன்றத்தின் காலத்தை நீடித்தமையை ஆட்சேபித்து தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை உதறித்தள்ளி வெளியேறியமை. தங்களின் சகோதரர் இதனால் எதிர்க்கட்சித் தலைவரானமை, முதலமைச்சராகிய பின் பிரதமராகத் தெரிவாகியதுடன் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் தங்கள் தாயாரையும் பிரதமராக்கியமை, கொலை முயற்சியில் மயிரிழையில் தங்கள் ஒரு கண்பார்வையை இழந்து தப்பியமை, மீண்டும் இரண்டாவது ஜனாதிபதியாகவும் தெரிவுசெய்யப்பட்டமை போன்ற பல நூற்றுக்கணக்கான சம்பவங்களை நினைவுபடுத்தலாம்.

நாடாளுமன்றில் அங்கத்தவராக இருந்த காலத்தில் மறைந்த எஸ்.ஜே.வே. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம், சி.கதிரவேற்பிள்ளை, மு.சிவசிதம்பரம், வி.என்.நவரத்தினம், எக்ஸ்.எம். செல்லத்தம்பு போன்ற பல கூட்டணித் தலைவர்களுடனும், டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாசா, ஏ.சி.எஸ்.ஹமீத், காமினி திஸாநாயக்கா, வி.ஏ.சுகததாஸ, அப்துல் பாக்கீர் மாக்கார், டபிள்யூ. தகநாயக்கா போன்ற பல ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களுடனும், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, மைத்திரிபால சேனநாயக்கா, பீலிக்ஸ் ஆர்.டீ.பண்டாரநாயக்கா, ரி.பி. இலங்கரத்ன மற்றும் பல சுதந்திரக் கட்சித் தலைவர்களுடனும, டாக்டர் என்.எம்.பெரேரா, டாக்டர் கொலவின் ஆர்.டி.சில்வா, லெஸ்லி குணவர்த்தன, விவியன் குணவர்த்தன, பெர்னாட் டி சொய்சா மற்றும் பல லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்களுடனும, டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, பீற்றர் கெனமன், எம்.ஜி.மெண்டிஸ் போன்ற



கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடனும் இ.தொ.கா.தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அஸீஸ் ஆகியோருடன் சமகாலத்தில பணியாற்றியவர்களுள் இன்று உயிருடன் இருப்பவன் நானே.

சிங்கள. முஸ்லிம், தமிழ் மாணவர்களுடன் நான் கல்விகற்றதுமட்டுமன்றி, சிங்கள, முஸ்லிம், தமிழ் மாணவர்களுக்கு கல்வி போதித்ததுடன் சிங்கள, முஸ்லிம், தமிழ் ஆசிரியர்களினால் பாடம் பயின்றேன். அவர்களோடு ஒன்றாக பலகாலம் வாழ்ந்தும் வந்திருக்கின்றேன் அதுமாத்திரமல்ல நான 70 வயதை முடித்துகொண்ட இந்நாட்டின் ஒரு பிரஜையாவேன்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக தங்களுக்கு சில அறிவுரை கூறும் தகுதியும் உரிமையும் எனக்குண்டு என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என நம்புகிறேன். தங்களின் தீவிர பரிசீலனைக்கென இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சில ஆலோசனைகளை வழங்கலாம் என்றும எண்ணுகின்றேன்.

முக்கியமான விடயத்துக்கு வருவதற்கு முன்னர் உங்களைப் போல் உயர்பதவி வகித்த, வகிக்கின்றவர்களில் கொலையாளிகளால் அதிகம் பாதிப்புக்குள்ளானவர்களில் நீங்கள் தான் அதிகம் பாதிப்புக்குள்ளானவர் என்பதை நான் உணர்கின்றேன். இந்த நாட்டின் அதி உச்சமான பதவியாகிய ஜனாதிபதி பதவியை அடைந்தது ஒரு பெரும் சாதனை; மிக்க மகிழ்ச்சிதரும் விடயம். இரண்டாவது தடவையும் அதே பதவியை வென்றதன் மூலம் இம்மகிழ்ச்சி இரட்டிப்பாகியிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியாக நீங்கள் தெரிவு செய்யப்பட்டமைக்கு சிறுபான்மையினங்களாகிய தமிழர்களும், முஸ்லிம்களும், ஒரு முக்கிய காரணமாக இருந்துள்ளனர். உங்களை சமாதானப் புறா எனப் பாராட்டி சகல சமூகத்தினரும் வரவேற்று ஆதரவு தந்தனர். நீங்கள் 1995ஆம் ஆண்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று யாரும் கூறமாட்டார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியினராகிய நாம் உங்களுடையதும் கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களினதும் மிகப் பெரிய முயற்சியை வரவேற்றோம். துரதிர்ஷ்டவசமாக அந்த முயற்சிகள் தோல்வியுற்றன. கலாநிதி நீலனுடைய கொலையும் நாட்டுக்குப் பேரிழப்பாக முடிந்தது.

ஜனாதிபதி அவர்களே! 45 ஆண்டுகள் தீவிர அரசியலில் ஈடுபட்டிருந்தவன் என்பதால் எம்மை ஆதரிக்கும் மக்கள் நாம் கூறுவதை செவிமடுப்பார்கள் என்ற நம்பிக்கை உடையவன் நான். நாம் நியாயமானவற்றைக் கூறினால் மக்கள் ஏற்பார்கள் என்பது நான அனுபவரீதியில் கண்ட உண்மை. நியாயமற்ற அழுத்தங்களை கட்சித் தலைமைகளுக்கு சிலர் கொடுத்ததனால்தான எமது நாடு இப்படிச் சீரழிந்திருக்கிறது. பதவியில் ஒட்டியிருப்பதற்காகவோ அல்லது சிறு குழுக்களின் நியாயமற்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவோ தலைவர்கள் தடம்புரண்ட சம்பவங்கள் நடந்துள்ளன. நான் இதற்குப் பல உதாரணங்களைத் தரமுடியும்.

இந்தியாவிலிருந்து இலங்கையைப் பிரிப்பது 28 மைல் அகலமுடைய பாக்குத் தொடுவாய் ஆகும். நான் படிக்கின்ற காலத்தில் வல்வெட்டித்துறை மாணவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன், எவ்வாறு பொழுதுபடும்வேளை இந்தியா புறப்பட்டு 400 லட்சம் தமிழர்கள் வாழும் தமிழ்நாட்டுக்குச் சென்று ஓர் எம்ஜி.ஆரின் படத்தை பார்த்துவிட்டு விடிவதற்கு முன்னர் வீடுவந்து விடுவார்கள் என்று. இந்த ஒருவிடயத்தை இந்நாட்டிலுள்ள இனவாதிகள் உற்றுக்கவனிப்பார்களேயானால் மறைந்து நிற்கும் பல விடயங்களைப் புரிந்து கொள்வார்கள் என்பது மட்டுமின்றி இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தைரியமாக சில நடவடிக்கைகளை எடுக்க உங்களுக்கும் உதவும். இந்நாடு நமது எல்லோருக்கும் சொந்தமான நாடென்றே நான் எண்ணுகிறேன். யார் முதல் இந்த நாட்டிற்கு வந்தார்கள் பின்பு யார் வந்தவர்கள் என்பதெல்லாம் பொருத்தமற்றவை. நாம் எல்லோரும் இந்தியாவில் இருந்து வந்தவர்களே. இந்தியா நமது தாய் நாடு என்றே நாமனைவரும் நோக்கவேண்டும்.

20ஆண்டுகள் தொடர்ந்த யுத்தம் ஒருவருக்கேனும் வெற்றியைக்கொடுக்கவில்லை. எல்லோருக்கும் அழிவையே கொடுத்தது. பல விதவைகள், அநாதைகள், ஆதரவற்றவர்களை விட்டுவிட்டு பல்லாயிரக்கணக்கானோர் இறந்துள்ளனர். பல லட்சம் குடும்பங்கள் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து இந்தியாவிலும் இலங்கையிலும் தனிப்பட்ட வாழ்வின்றி போதிய உணவுவசதிகளின்றி தகுதியான கல்வியைத் தமது பிள்ளைகளுக்கு கொடுக்க முடியாத நிலையில் வாழ்கின்றார்கள். பெரிய வீடுகளின் சொந்தக்காரர்களாகவும் திருப்தியான வாழ்க்கையை நடத்தக்கூடிய சகல வசதிகளுடன் வாழ்ந்தவர்களும் இன்று ஏழைகளாகி அநாதரவாக வாழ்கின்றார்கள்; தமது வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிக்க முடியாது தவிக்கின்றனர். ஒரு தாய் என்ற முறையில் இத்துரதிர்ஷ்டவாதிகளின் உணர்வுகளை மற்றவர்களிலும் பார்க்க இலகுவாகத் தங்களால்தான் புரிந்துகொள்ளமுடியும்.

20வருடங்களின் பின் முதற்றடவையாக விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தம் செய்து அரசுடன் பேச்சுநடத்தி தீர்வுகாண சம்மதித்துள்ளனர். இறப்பதற்கு முன்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரம் அவர்கள் பிரச்சினைகளை பேசித் தீர்ப்பதற்கு இதுதான் நல்ல சந்தர்ப்பம் மட்டுமல்ல இறுதிச் சந்தர்ப்பமும் என்றும் கூறினார்.

ஜனாதிபதி அவர்களே! இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - அற்ப கட்சி நலன்களைப் பாராது கடந்த காலத்தில் நடந்த மகிழ்ச்சி தராத பல்வேறு சம்பவங்களை மறந்து ஒரு நிரந்தரத் தீர்வுகாணும் வகையில் ஆளும் கட்சியினரையும் எதிர்க்கட்சியினரையும் ஒன்றிணைத்து நடவடிக்கை எடுக்கும் புனிதமான கடமை உங்களுக்குண்டு.

சமாதான முயற்சிகளுக்கு கடந்த காலத்தில் ஆட்சிக்கு வந்தவர்களுக்கு எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்பு கிடைக்காதமையினால் முயற்சிகள் எதுவும் வெற்றிபெற முடியவில்லை. இம்முறையும் அதேபோன்று நடக்க நாம் விடக்கூடாது. இன்றுள்ள நிலையில் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் நிரந்தரத் தீர்வினைக் காண்பதில் எதுவித சிரமமும் இருக்காது.

ஜனாதிபதி அவர்களே! இடைக்கால நிர்வாகக் கதை புதியதல்ல என்பதை அறிவீர்கள். என்றோ ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், இந்தியப் பிரதமர் ஸ்ரீ ராஜீவ் காந்தி அவர்களும் விடுதலைப் புலிகளுக்குக் கூடுதல் பிரதிநிதித்துவத்துடன் வழங்கப்படுவதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. சமாதான முயற்சியில் வெற்றியடைய பெருந்தன்மையாக இவ்வாலோசனைக்கு ஆதரவைத் தாருங்கள். அத்துடன். ஏறக்குறைய 15ஆண்டுகளுக்கு மேலாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையை பிரிக்காமல இருந்ததுபோல இணைந்த மாகாணமாக இயங்க விடுவதன்மூலம், கிழக்குப் பகுதியில் வாழும் மக்கள் மத்தியில் நல்லுறவை வளர்க்க உதவுவது மட்டுமல்ல ஏனைய பகுதிகளிலும் மூன்று சமூகத்தினரும் ஒற்றுமையாக வாழ உதவும்.

நம்மக்களுக்கு இன்று வேண்டுவதெல்லாம் சமாதானமே! - நிரந்தர சமாதானமும், இயல்பான வாழ்க்கைக்கு விரைவில் திரும்புவதுமே ஆகும். அவர்கள் தம் வீடுகளுக்குச் சென்று இயல்பு வாழ்க்கையை ஆரம்பிக்க விரும்புகின்றார்கள். அதுமட்டும்தான் அவர்களுக்கு வேண்டியது. ஜனாதிபதியான நீங்கள கடந்த காலத்தை மறந்து சமாதான முயற்சிக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கி கருணை காட்டுவீர்கள் என நான் திடமாக நம்புகின்றேன். நீங்கள ஜனாதிபதியாக பதவி வகிக்கும் காலம எமது சரித்திரத்தில் ஒரு பொற்காலமாக அமையட்டும்.

என் கடிதத்தை முடிக்க முன்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பல்வேறு பகுதியினராலும் சிரமத்துக்குள்ளாக்கப்பட்டுவருவதால் எதுவானாலும் பேசித் தீர்ப்பதை விடுத்து அவர்களைத் திருப்பி அனுப்பும் முயற்சியைக் கைவிடுமாறும் கேட்டுக்கொள்கின்றேன். தங்களுடன் இது சம்பந்தமாக சந்தித்துப் பேச ஒரு சந்தர்ப்பத்தைத் தருமபடி கேட்டுக்கொள்கின்றேன.

- இவ்வாறு ஆனந்த சங்கரி தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

(ஐ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 7 மணி முதல் யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறும கழகங்களுக்கிடையிலான போட்டியில பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ காலை 7 மணி-கிறாஸ் ஹொப்பர்ஸ் வி.க எதிர் பற்றீசியன் வி.க.

இதில் வெற்றிபெறும் அணி இன்று மாலை 4 மணிக்கு யாழ் பல்கலைக் கழக அணியுடன் மோதும்.

★ காலை 8 மணி - கோப்பாய் ஐக்கிய வி.க. எதிர் சென்ரலைற் வி.க

இதில் வெற்றிபெறும் கழகம் மாலை 5 மணிக்கு ஜொலிஸ்ரார் வி.கவுடன் மோதும்.

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.1

இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ. மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்த 19 வயதுப் பிரிவினருக்கான எவரெடி வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)


## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் — இறைவன் அடியில்

11 07 1927 — 30 09 2003



### திருமதி புவனேஸ்வரி கந்தையா

30.09.2003 அன்று லண்டனில் சிவபதம் அடைந்த எங்கள் குல விளக்கின் இறைபதச்செய்தி கேட்டு எமது இல்லம் நாடி ஓடோடி வந்து எமக்கு ஆறுதல்கூறி எம்துயரில் பங்குகொண்டு பலவழிகளிலும் உதவிகள் செய்து அன்னாரின் இறுதியாத்திரையிலும் கலந்துகொண்டதோடு தொலைபேசி மூலமும் தந்திகள் மூலமும் அனுதாபத்தைத் தெரிவித்த அன்பு உள்ளங்கள் அத்தனை பேருக்கும் முதற்கண் எம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (01.11.2003) சனிக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்வதோடு மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*முத்தட்டிமட வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

*- பிள்ளைகள், மருமக்கள்.*

(24307) (14-31-13-16)

## வல்வெட்டித் துறை நகராட்சி மன்றம்
## 2004 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

01.01.2004 தொடக்கம் 31.12.2004 வரையான காலப்பகுதிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் விவர கேள்விகள் இரு பிரதிகளில் 12.11.2003 ஆந் திகதி காலை 10.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். அதே தினம் நண்பகல் 12.00 மணிக்கு கேள்விப்படிவங்கள் திறக்கப்படும்.

| கேள்வி விவரம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்பு பணம் | படிவக்கட்டணம் | பெறுமதிசேர்வரி |
|---|---|---|---|---|
| 1. மீன்சந்தை, வல்வெட்டித் துறை (நகராட்சி மன்ற எல்லை முழுவதும் அறவிடலாம்) | 33,000/- | 1000/- | 100/- | 20/- |
| 2. தொண்டமனாறு செல்வச் சந்நிதி, துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம். (முழுவருடமும்) | 50,600/- | 1000/- | 100/- | 20/- |
| 3. வல்வெட்டித்துறை மாட்டிறைச்சிக்கடை | 1,39000/- | 1000/- | 100/- | 20/- |
| 4. மரக்கறிச் சந்தை, வல்வெட்டித்துறை | 44,500/- | 1000/- | 100/- | 20/- |

கேள்வித் தொகையுடன் மேலதிகமாக 20% பெறுமதிசேர் வரியும் செலுத்தப்படவேண்டும்.

மேற்படி வைப்புப் பணமும், கேள்விப்படிவக் கட்டணமும் பணமாகச் செலுத்தப்படுவதன் பேரில் 10.11.2003 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. எந்தக் கேள்விகளையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண உரிமையுண்டு. மேலதிக விவரங்கள் இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
2003-10-27

ஏ.எம்.ஜோசெப்,
செயலாளர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

(C/31058) (33-11-16-29)


கணபதி துணை

# திருமண அழைப்பு

பேரன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஐப்பசித்திங்கள் 17 ஆம் நாள் (03-11-2003) திங்கட்கிழமை சதய நட்சத்திரமும், பூர்வபக்க தசமித் திதியும் கூடிய காலை 9.50 மணி முதல் 11.30 மணி வரையுள்ள தனுக் லக்கின சுபமுகூர்த்த வேளையில்

திரு.திருமதி சிவராமலிங்கம் அவர்களின் கனிஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன்
மணிலால் (மணி)
அவர்களுக்கும்



திரு.திருமதி முருகேசு அவர்களின் ஏக புத்திரி திருநிறைசெல்வி
நிரஞ்ஜினி (ரஞ்ஜி)
அவர்களுக்கும்

நயினை ஸ்ரீ நாகபூசனி அம்பாள் திருவருள் துணை கொண்டு வெள்ளவத்தை, மியாமி (எமரெல்ட்) வரவேற்பு மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி நா.க.சிவராமலிங்கம்
பிள்ளைகள், மருமக்கள்
1087, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

இரு வீட்டார் அழைப்பு

திரு.திருமதி சிவகாமசுந்தரி முருகேசு
பிள்ளைகள், மருமக்கள்
3ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(24314) (33-11-16-29)



# நிலவு.Com இன்
# தமிழ் கணினி -2003
## மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

இடம்: யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடம்
காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

**இன்றும் நாளையும் மட்டும்**

★தமிழ் மென்பொருள்கள் ★கற்றலுக்கான தமிழ் CDக்கள்
★தமிழ் மூலம் புத்தகங்கள் ★மென்பொருள் மற்றும் GAME CDக்கள்
★கணினி மூலம் ஜாதகம் ★'கம்ப்யூட்டர் Info' மாதாந்த மின்னிதழ்
★இன்னும் இன்னும்..... அனுமதி 10/=

அனுசரணை:
கம்பியூட்டர் Info    IT Island    NIIT

ஊடக அனுசரணை: உதயன்

(C/31261) (29-11-16)



மோட்டார் வாகன உரிமையாளர்களே!
உங்கள் மோட்டார் வாகன பதிவுக்கான புகைப்படங்களை அரைமணி நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
**லைவ் ஸ்ருடியோ**
இல.8, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (நீதிமன்றம் அருகில்) T.P:222 6334
சில்லாலை, பண்டத்தரிப்பு. T.P: 0777 570400
(24318) (33)


## ஏ-9 வீதி விபத்தில் இளம் பெண் படுகாயம்!

கிளிநொச்சி,நவ.1

ஏ-9 வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் இளம் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து பரந்தன் நோக்கிச் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண் மீது பின்னால் வந்த 'ஹைஏஸ்' ரக வாகனம் மோதியதாகக் கூறப்படுகிறது.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கிளிநொச்சி, உமையாள்புரம் விளாவோடையைச் சேர்ந்த செல்லத்துரை சுதாமதி (வயது-24) என்ற இளம் பெண்ணே படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-5)


**நாகம்ஸ் சுன்னாகம்**
2ஆவது வெற்றி வாரம் இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் வெளியாகிய இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண், விவேக் நடித்த திருமலை



தினசரி காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பி.நே.)
ஆசனங்களை பின்வரும் இடங்களில் பதிவுசெய்யலாம்.
ரட்ணம்ஸ் பாட்டா 48, கஸ்தூரியார் வீதி, யாழ். T.P.: 021-222 2917.
நாகம்ஸ் பாட்டா சுன்னாகம் 060 221 2779.
(C/23900 M1)

**நிர்மலா சினிமா** சங்கானை
MGR (இருவேடம்), சரோஜாதேவி நடித்த எங்க வீட்டு பிள்ளை (சினிமா)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இந்த
× × ×

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதினத்தில் வெளியாகிய
சேதுபுகழ் விக்ரம், சூர்யா, லைலா நடித்த பாலாவின் பிதாமகன்



காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30. (பி.நே.)
ஆசனங்களை முன்பதிவு செய்துகொள்ளலாம்.

**லஷ்சுமி சினிமா** இணுவில்
சரத்குமார (இருவேடம்), கிரண், வடிவேலு நடித்த திவான்



காட்சிநேரம்: 10.30, 3.00, 7.00. (பி.நே.)

**லிபேட்டி** அச்சுவேலி
இளைய தளபதி விஜய் நடித்த பகவதி



காட்சி நேரம்: 3.00, 7.00.



# R.B. பஸ் ஆசனப்பதிவகம்



## விசேட கட்டணக் குறைப்பு

யாழ். - கொழும்பு வான் சேவைக்கு
~~1000/=~~ 900/=
புதிய கட்டணம்
மற்றும் குளிரூட்டப்பட்ட பெரிய பஸ் ஆசனப் பதிவுகளும் செய்து கொடுக்கப்படும்.

R.B.பஸ் ஆசனப் பதிவகம்,
15, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். T.P.021-222 7016
(சைக்கிள் பாதுகாப்புக்கு அருகில்)
(C/31062) (29-11-16)


# மரண அறிவித்தல்கள்

## கோவிந்தபிள்ளை பரமசிவம்

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் குஞ்சுப் பரந்தனை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய கோவிந்தபிள்ளை பரமசிவம் 30.10.2003 வியாழக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை-தெஹிவளை பொது இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.52, வைத்தியா ரோட்,
தெஹிவளை.

தகவல்:
கந்தசாமி நாகேந்திரம்
தொலைபேசி: 0112 726621 (24317) (29-11-16)

## திருமதி பாக்கியம் பாலசிங்கம்

கரவெட்டி மேற்கில் வசித்த திருமதி பாக்கியம் பாலசிங்கம் 30.10.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பாலசிங்கம் (ஓய்வுபெற்ற கட்.நெ.பல நோ.கூ.சங்கக் கிளை மேற்பார்வையாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும் பாமினி (லண்டன்), பாலசிறிதரன் (லண்டன்), பாலராஜ் (கட்டட திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பார்த்திபன் (லண்டன்), கஜனி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற அருணாசலம் (மலேசியா), கந்தப்பு (கொழும்பு), சிவப்பிரகாசம் (வாழைச்சேனை), காலஞ்சென்ற சின்னத்துரை (தபால் அதிபர்), இரத்தினம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2003) சனிக்கிழமை 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்கவும்.

சிறுமணியம் தோட்டம்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

தகவல்:
பா.பாலராஜ் (மகன்)
கட்டட திணைக்களம், (மத்தி),
யாழ்ப்பாணம்.
(24309) (29-11-16)

## வன்னியில் வீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று உரப்பையினுள் உருமறைப்புச் செய்து ஒளித்து வைக்கப்பட்ட நிலையில்காணப்பட்டது என்று தெரிவிக்கப் படுகிறது. இதனையடுத்து துப்பாக்கியை கைப்பற்றிய காவல் துறையினர் வாகனத்தைப் பொறுப்பேற்றதுடன் அதிலிருந்தவர்களைக் கைதுசெய்து விசாரணைக் குட்படுத்தினர்.

அவர்கள் தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள் இனத்தவர்கள் என்பதும், பரந்தன் பகுதியில் வீதிப்புனரமைப்பு வேலைகளில் ஈடுபடும் ஒரு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் விசாரணைகள் மூலம் தெரிய வந்திருப்பதாக தமிழீழ காவல்துறை நடுவப்பணியகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கைது செய்யப்பட்ட இருவரும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டி ருக்கின்றனர். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி காவல்பணிமனையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

IIS

புலமைப்பரிசில் திட்டம் 2004

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இனூடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003

விண்ணப்ப படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடா நாட்டின் தலைசிறந்த புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மே. விபரங்களுக்கு
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாக உள்ளது. என்று ஜனாதிபதி கருதுகின்றார். எனவே, இது குறித்து விசாரித்துத் தனது கருத்தைத் தெரிவிக்கும்படி உயர் நீதிமன்றத்தை ஜனாதிபதி கேட்டிருந்தார்.

அதற்கமைவாக, பிரதம் நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் எஸ்.எச்.யாப்பா, ஷிராணி பண்டாநாயக்கா, அமீர் இஸ்மாயில், நிஹால் ஜயசிங்க ஆகியோரைக் கொண்ட உயர்நீதிமன்று இந்த விடயத்தை விசாரணை செய்தது.

மனுதார் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி.சில்வா ஆஜாகி வாதாடினார். சட்டமா அதிபர் கே.ஸி. கமலசபேசனும் தனது கருத்துக்களை முன்வைத்தா. (ஐ)

G.A.Q., 1st in com.
G.S.Q. (கணிதம்)

க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
விவரங்களுக்கு:
இயக்குநர்,
பட்டப்படிப்புக்கள் கல்லூரி,
57/1B, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(24261) (33-11-14)

## போர் நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டிருக்கிறது.கடந்த பல சம்ப வங்களை ஆராய்ந்தபின்னரே, பாரபட்சமற்ற முறையில் செயற்பட கண்காணிப்புக் குழுத் தலைவர் தவறியிருக்கிறார் என்ற முடிவுக்கு ஜனாதிபதி வந்திருக்கிறார் எனவும் -

எனவே, நாட்டினதும், அரசினதும் தலைவி என்ற முறையில் இத்தீர்மானத்தை ஜனாதிபதி மேற்கொள்ள நேர்ந்தது எனவும் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

வடமராட்சி, யாழ். - கொழும்பு
பயணிகள் வான் சேவை
நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆசனப் பதிவுசெய்யலாம்.
வாடிக்கையாளர் கட்டணம் 900/=
ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்
கொடிகாமம் வீதி, நெல்லியடி, தொ.இ.021-226-3900
JEYA COMMUNICATION COLOMBO-13
Tel:01-2478444, 01-2478443, 0777-271478
லொறி மூலம் பொருள்களை அனுப்பலாம்.

## கம்யூனிஸ்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாசார நிகழ்வு என்றும் இலங்கையின் பிரபல கலைஞர்கள் இதில் கலந்து கொண்டதாகவும் கம்யூனிஸ்ட் கட்சி தனது செய்திக் குறிப்பில் தெரிவித்தது.

## தமது இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு திரும்பியதும் நோர்வேத் தூதர் ஹென்ஸ் பிரஸ்கர் அந்த வரைவினை அரசின் சார்பில் பேச்சில கலந்துகொள்ளும் குழுவின் தலைவரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் கையளித்தார்.

அமைச்சர் பீரிஸின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இந்த வைபவம் நேற்று மாலை இடம்பெற்றது.

புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பாக அரசுத் தரப்பில் இருந்து இன்று அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-8)

கோப்பாய் பிரதேச
இளைஞர் கழக
வளர்ச்சி நிதிக்காக நடத்தும்
மாபெரும் கலைவிழா

யாழ்.F.M. அறிவிப்பாளருடனும் நவீன ஒலி,ஒளி அமைப்புடனும் தமிழீழத்தின் புகழ்பெற்ற பாடகர் S.G. சாந்தனுடன் யாழ். புகழ் ஐங்கரன் இசைக் குழுவினர் வழங்கும் இன்னிசை நிகழ்ச்சி
வடமராட்சி புகழ் பாஸ்கரன் நடனக் குழுவினரின் ஆண்களும், பெண்களும் இணைந்து வழங்கும் மேலைத்தேய நடன நிகழ்வு (Break Dance).
ஆண்களும், பெண்களும் இணைந்து வழங்கும் கராத்தே கண்காட்சி
இடம்:- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
காலம்:- இன்று (01-11-2003) சனிக்கிழமை
மாலை 6 மணி

பிரவேசம் ரூபா 30 மட்டுமே!

ரிக்கற்றுக்களை நுழைவாயிலில் பெறலாம்.

விளம்பர அனுசரணை:-
கோபி கொமினிகேசன்,
& மலர் ஸ்டோர்,
பெற்றோல் செட் அருகில்,
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
T.P:-021-2226712

தர்சி கொமினிகேசன் சென்ரர்
மானிப்பாய் வீதி,
கைதடி மேற்கு,கைதடி
T.P:0602122774
(24306)(36-11-14)

சந்திரனின் உதயம்
ஹினோடே

உங்களுக்கு
மிற்சுயியையத் தந்த
டோக்கியோ சிமெந்து நிறுவனம்
வழங்கும்
ஹினோடே
இலங்கை
மக்களின்
நம்பிக்கையை
மேலும் வலுப்படுத்தி
கட்டட
நிர்மாணத்துறையில்
புத்தொளி பரப்புகிறது.




SLS
பொறிக்கப்பட்டது

பொதுவான களைகள், வேர்த்தண்டுக்
கிழங்குள்ள களைகளை
சிறப்பாக கட்டுப்படுத்த
டிஸ்ட்ரோய்
பின்கெம்

FINCHEM
AGRO DIVISION



பீ.ஏ.எஸ்.எவ்.பின்லே(பிரைவெட்) லிமிட்டெட்,
186, வொக்ஸ்சோல் வீதி,
கொழும்பு - 02

மேட்டு சேற்று நில
விவசாயத்தை - காப்பாற்றும்

பீடைநாசினிகள் ஆபத்தானவை அவதானமாகக் கையாளுங்கள்

அலுவலகர்
தேவை

எமது கல்வி நிறுவனத்துக்கு ஆண் அலுவலகர் தேவை. தங்களுடைய சொந்த எழுத்தில் எழுதப்பட்ட சுய விபரத்தை 5-11-03 முன் எமது அலுவலகத்தில் நேரில் வந்து ஒப்படைக்கவும்.
விக்னா கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி,
(24310) யாழ்ப்பாணம்

எமது புதிய வீடியோ CD
வெளியீடுகள்
பிதாமகன்
கையோடு கை
விஸ்ணு வீடியோ
கோண்டாவில்

எமது புதிய வீடியோ CD
வெளியீடு
விக்ரம் நடித்த பிதாமகன்
CDகளும், பிரதிகளும் உடன் பெறலாம்.
சோலை வீடியோ விசன்
பிரதான வீதி,
நெல்லியடி.

எமது நேற்றைய வீடியோ CD
வெளியீடுகள்
பிதாமகன்
கையோடு கை
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விஷன்
யாழ்ப்பாணம்
(24316) (33)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.